# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 03 சனிக்கிழமை (15-02-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:81





மானிப்பாயில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் மற்றும் பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து நேற்று யாழ்.நகரில் கண்டனப் பேரணி நடந்தது. யாழ்.பொது நூலகக் கட்டடத்தின் முன்பாகவிருந்து பேரணி புறப்படுவதையும் இடுப்புப் பட்டியுடன் பேரணியில் கலந்துகொண்ட யுவதிகளில் ஒரு பகுதியினரையும் ஜனாதிபதி மற்றும் வட பிராந்திய இராணுவத் தளபதி ஆகியோரது கொடும்பாவிகள் எடுத்து வரப்படுவதையும் படங்களில் காணலாம். (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்) *படங்கள்:தேவராஜன்*

# இராணுவத் தாக்குதலைக் கண்டித்து ஆயிரக்கணக்கானோர் நேற்று பேரணி!

## வடமராட்சியிலும் கொடும்பாவி எரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

மானிப்பாயில் பெண் போராளிகள் மற்றும் பொதுமக்கள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நேற்று வடமராட்சியில் மூன்று இடங்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரது கொடும்பாவிகள் எரியூட்டப்பட்டன. உடுப்பிட்டி பெருச்சந்தைச் சந்தி, மாலிச் சந்தி, பருத்தித்துறை மெத்தைக கடைச் சந்தி ஆகிய இடங்களில் கொடும்பாவி எரிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

## வழி எங்கும் ஆவேசக் கோஷங்கள் கொடும்பாவி எரிப்பு! மகஜர் சமர்ப்பிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்ரவரி15

**மானிப்பாயில் புலிகளின் பெண் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் படையினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்தும் இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரியும் யாழ். நகரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் ஆவேசமாக கோஷங்களை எழுப்பியவாறு பேரணியில் கலந்துகொண்டனர்.**

நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ். பொது நூலக முன்பிருந்து ஆரம்பித்த பேரணி ஆஸ்பத்திரிவீதி வழியாகச் சென்று பருத்தித்துறை வீதி, கோவில் வீதி ஆகியவற்றின் வழியே கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக முன்றிலைச் சென்றடைந்தது அங்கு கண்காணிப்புக் குழுவின் யாழ் மாவட்டத் தலைவர் ஒலே புறொண்டத்திடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

பல்கலைக்கழகம், பாடசாலைகள்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## இடுப்புப் பட்டிகளுடன் பேரணியில் பெண்கள்

யாழ்ப்பாணம்,பெப்.15

பெண் போராளிகள் இடுப்புப் பட்டி அணிந்து நடமாடுவது தொடர்பான பிரச்சினையிலேயே மானிப்பாயில் பெண்போராளிகள் மற்றும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவத்தை கண்டித்து நேற்று யாழ். நகரில் நடத்தப்பட்ட பேரணியில் கலந்துகொண்ட யுவதிகள் அனைவரும் விடுதலைப் புலிகளின் பெண்போராளிகள் அணிவது போன்ற இடுப்புப்பட்டிகளை அணிந்திருந்தனர்.

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகம் ஆணையாளர்களின் பொறுப்பில்?

திருகோணமலை,பெப்.15

வடக்கு - கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் நாளை மறுதினம் முடிவடைகின்றது. அதன் பின் அவற்றின் காலம் நீடிக்கப்படாத பட்சத்தில் தற்சமயம் ஆணையாளர்களாகப் பணிபுரிபவர்களின் பொறுப்பில் அச்சபைகளின் நிர்வாகம் ஒப்படைக்கப்படும் எனத் தெரியவருகிறது'.

சபைகள் செயலிழந்ததும் அந்தச் சபைகளை நிர்வகிக்க விசேட ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்கள் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது விடயமாக உள்ளூராட்சி சபைகளுக்குப் பொறுப்பான உயர் அதிகாரியிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

'அவசரகால விதிகளின் கீழ் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தை நடத்த விசேட ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். தற்சமயம் அவசரகால விதிகளின் கீழ் இந்தச் சபை நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. சுமுகமான சூழ்நிலை நிலவுவதால், சாதாரண உள்ளூராட்சி கட்டளைச் சட்டங்களின் கீழ், தற்சமயம் ஆணையாளர்களாகப்பணி புரிபவர்களே சபைகளின் நிர்வாகத்தை மேற்கொள்ள முடியும் - என்று தெரிவித்தார்.

அதேவேளை - இந்த விடயம் தொடர்பாக சட்ட ஆலோசனையை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

*யாழ்.மாநகர சபையின் 23 உறுப்* பினர்களும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்து அவர்களின் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிக்குக் கிடைத்த

(12ஆம் பக்கம் பார்க்க)

# மானிப்பாய் சம்பவம் குறித்து ராணுவ விசாரணை ஆரம்பம்

## சரத் கருணாரத்ன தெரிவிப்பு

கொழும்பு,பெப்.15

மானிப்பாயில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இராணுவ விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்ன தெரிவித்தார்.

இராணுவத் தளபதியின் உத்தரவுப்படி இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் -

விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

# தீ விபத்து; கொழும்பில் உள்ள பகுப்பாய்வு திணைக்களத்தில்

கொழும்பு,பெப்.15

கொழும்பு - பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தில் நேற்றிரவு 9.00 மணியளவில் அதிரவைக்கும் பாரிய வெடிச்சத்தம் கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்து கட்டடத்தின் இரண்டாம் மாடி தீப்பற்றிக் கொண்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புப் படையினர் பெரும் முயற்சி செய்து தீயை முழுமையாகக் கட்டுப்படுத்தினர். இந்தத் தீயனர்த்தத்

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதிக்கு சமாதானத்தில் ஆர்வம் இருப்பதாக ஒருபோதும் நம்பவில்லை!

## பேர்லினிலிருந்து திரும்பிய தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதைக்கான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் விருப்பமிருக்கிறது என்று விடுதலைப் புலிகள் ஒருபோதும் நம்பவில்லை என புலிகள் இயக்க அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறுகிறார்.

பேர்லின் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றிவிட்டு வன்னி திரும்பும் வழியில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் அவர் இதனை சிங்களப் பத்திரிகை ஒன்றிடம் தெரிவித்திருக்கிறார்.

இதனால் இன்றைய சமாதான முயற்சிக்கு அவரிடமிருந்து கடுகளவாவது ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாதெனவும் அவர் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறுகையில், "சிறுவர்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் என்று ஜனாதிபதி பெரும் அனுதாபத்துடன் பேசுகிறார். ஆயினும், 1995ஆம் ஆண்டில் அவரது அரசாங்கம் பதவியிலிருந்த போது நாகர்கோவில் பாடசாலையின் மீது

(12ஆம் பக்கம் பார்க்க)

# *14 மாநகர சபை உறுப்பினர்களின் ராஜினாமாக் கடிதங்கள் கையளிப்பு*

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.மாநகர முதல்வரும் உறுப்பினர்களில் 13 பேரும் தமது ராஜினாமாக் கடிதங்களை மாநகரசபை ஆணையாளரிடம் நேற்றுக் கையளித்தனர்.

யாழ்.பொது நூலகத்தைத் திறப்பது தொடர்பாக உருவாகிய சர்ச்சையையடுத்து யாழ்.மாநகராட்சி மேயர் செ.கந்தையன் உட்பட மாநகர சபையின் 23 உறுப்பினர்களும் ராஜினாமா செய்வதாக நேற்றுமுன்தினம் மாநகர சபையில் கூட்டப்பட்ட செய்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## மானிப்பாயில் போராளிகளையும் மக்களையும்

# தாக்கியவர்களைத் தண்டிக்காதுவிட்டால் படையினரின் யுத்தநிறுத்த மீறல் தொடரும்!

### பொது அமைப்புகளின் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

மானிப்பாயில் பெண் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தியவர்களை தண்டிக்காது விட்டால் படையினரின் யுத்தநிறுத்த மீறல்கள் தொடரும்.

யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் நேற்று கண்காணிப்புக்குழுவிடம் கையளித்த மகஜரில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த மகஜரின் முழு விவரமும் வருமாறு:-

கடந்த புதன்கிழமை மானிப்பாய்ப் பகுதியில் விடுதலைப் புலிப்பெண் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் ஸ்ரீலங்கா ஆயுதப்படையினரும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் இணைந்து நடத்திய தாக்குதலை வன்மையாகக்கண்டிக்கிறோம்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுதப்பட்டு ஒருவருட காலப்பகுதியில் ஸ்ரீலங்கா ஆயுதப்படையினர் பல்வேறு யுத்தநிறுத்த மீறல்களை புரிந்துள்ளனர். இதுதொடர்பாக நாங்கள் காலத்துக்கு காலம் தங்களுக்கு முறையிட்டுள்ளோம் தாங்கள் காத்திரமான நடவடிக்கையினை எடுக்காததால் இவ்வாறான யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் அதிகரித்து வந்துள்ளன. நெடுந்தீவுக் கடற்பரப்பிலே ஏற்பட்ட சம்பவதுக்கு கடற்படையினரே பொறுப்பு இது தொடர்பாக தாங்கள் நடுநிலையில் நின்றிருந்தால் மூன்று போராளிகளின உயிர்ப்பிரிவை தடுத்திருக்கலாம். இந்தச் சம்பவத்தின் வடுக்கள் ஆறு முன் மற்றுமொரு சம்பவம் மானிப்பாயில் நடந்துள்ளது. மானிப்பாயில் பெண் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும நடத்தப் பட்ட தாக்குதலுக்கு பாரபட்சமற்ற விசாரணை நடத்தி, இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்களை தண்டிக்காவிட்டால் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் யுத்தநிறுத்த மீறல்களை செய்வார்கள் என்பதை நடந்தவை உணர்த்தி நிற்கின்றன. நாங்கள் சமாதானத்தை விரும்புகிறோம். ஆனால், ஆயுதப் படையினர் யுத்தத்தையும் அடாவடித்தனமான நடவடிக்கைகளையுமே விரும்புகின்றனர். சமாதானத்துக்கு எதிரான சக்திகளை படையினர் ஊக்குவிக்கின்றனர். ஆதலால், ஆயுதப்படையினரின் நடவடிக்கைகளை தொடர்ந்து அனுமதிக்கமுடியாது.

இவர்கள் வடக்கு - கிழக்கில் தங்கியிருக்கும் வரை தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணமே இருக்கும் என்பதுடன் சமாதானப்பேச்சுக்களையும் தொடர முடியாத நிலைமையே ஏற்படும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனவே, மக்களின் இயல்பு வாழ்க்கை ஏற்பட்டு சமாதானமுயற்சிகள் வெற்றிபெற வேண்டுமானால் யாழ் குடாவில் இருந்து ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் முற்று முழுதாக வெளியேற வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இவ்விடயத்தில் நடுநிலையாக நின்று செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் நூற்றுக்கணக்கான பொது அமைப்புகளும் ஆயிரக்கணக்கான மக்களும ஒன்றிணைந்து இப்பேரணியூடாக தெரியப்படுத்தி இம்மகஜரை சமர்ப்பிக்கின்றோம்-என்றுள்ளது. (ஓ-8)

#### தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ மேற்கிலிருந்து

## இடம்பெயர்ந்த பொதுமக்கள் மீளக்குடியமரக் கோரி மகஜர்

### பிரதேச செயலர், படை அதிகாரியிடம் கையளிப்பு

சாவகச்சேரி,பெப்.15

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ மேற்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த பொதுமக்கள் தம்மை சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரும் மகஜரை நேற்று தென்மராட்சி பிரதேச செயலரிடமும், 521 ஆவது பிரிகேட்டின் சிவில் அதிகாரி மேஜர் குணசிங்கவிடமும் கையளித்தனர்.

தமது அயல் பிரதேசங்களான கைதடி-நாவற்குழி மற்றும் கோயிலாகண்டி பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் -

ஆனால் விவசாயத்தை நம்பி வாழும் தாம் இடம்பெயர்ந்து கடந்த 3 ஆண்டுகளாக அல்லலுறுவதாகவும் -

ஆகவே, தமது சொந்த இடங்களில தம்மை மீளக்குடியமர ஆவன செய்யுமாறும் -

இடம்பெயர்ந்த மக்கள் மகஜரில் கோரியுள்ளனர்.

இவர்களின் கோரிக்கை தொடர்பாக பரிசீலனை செய்வதாக இராணுவ அதிகாரியும், உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலரும் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கூடிய மக்கள் மகஜரை கையளித்தனர். விரைவில் மீளக்குடியமர அனுமதிக்காவிட்டால் பிரதேச செயலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்ததிட்டமிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (ஒ-31)

## ஜப்பானின் விசேட தூதர் நேற்று திருமலை விஜயம்!

இலங்கை அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு உதவும் ஜப்பானின விசேட தூதுவரான யசூசி அகாஷி நேற்று திருகோணமலைக்கு விஜயம செய்தார். அவர் மாவட்டத்தின் மூவினப்பிரதிநிதிகளையும் சந்தித்தப் பேசினார்.

நேற்றுக்காலை திருமலை உட்துறைமுக வீதியில் உள்ள போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினரை அவர்களின் அலுவலகத்தில் சந்தித்தார். திருமலை மாவட்டத்தில் இடம் பெற்ற யுத்தநிறுத்த மீறல்கள், மாவட்ட நிலைமைகள் ஆகியன பற்றி அப்போது பேசப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

காலை 10.20 மணிக்கு நியு சில்வர் ஸ்டார் ஹோட்டலில் தமிழ் பிரதிநிதிகளை அகாஷி சந்தித்தார். இச்சந்திப்பில் சட்டத்தரணி கா.சிவபாலன் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் து.தவசிலிங்கம், தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் சி.தண்டாயுதபாணி, சட்டத்தரணி இரா.திருக்குமரநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு திருகோணமலை மாவட்ட தமிழர்களின் தேவைகள், குறைபாடுகள் பற்றி எடுத்துக்கூறினர்.

தூதுவர் அகாஷி கருத்துத் தெரிவிக்கையில் - "அரசும் புலிகளும கவனமாகச் செயற்படவேண்டும் எமக்கு சமாதானத்தில் நம்பிக்கையுண்டு. சில தவறுகள் நடந்தாலும் பாரிய மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. இனிமேல் அவ்வாறு நடக்காது என நாம் நம்புகின்றோம்'' என்றார்.

முற்பகல் 11 மணியளவில் முஸ்லிம் தரப்பினரைச் சந்தித்துப் பேசிய அவர் சிங்களத்தரப்பினரையும் படைகளின் உயர் அதிகாரிகளையும் பின்னர் சந்தித்தார்.

## யாழ்.நூலகத் திறப்பு விழா ரத்துக்கு அரசு, புலிகள் மீது பொ.ஐ.மு.கண்டனம்

கொழும்பு,பெப்.15

யாழ்ப்பாணம் பொது நூலகத் திறப்பு விழா ரத்துச் செய்யப்பட்டது குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணி கண்டனம் தெரிவிக்கிறது. எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீர நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இக்கண்டனத்தைத் தெரிவித்தார். திறப்பு விழா ரத்து செய்யப்பட்டதற்காக புலிகள் இயக்கத்தின் மீதும் அரசின் மீதும் கண்டனம் தெரிவிப்பதாக அவர் சொன்னார். யாழ்ப்பாணம் பொது நூலகத்தை மீளக்கட்டியெழுப்பும் பணி ஜனாதிபதியின் முயற்சியால் 1995 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட ஒரு அநீதியை நீக்குவதற்கே ஜனாதிபதி இம்முயற்சியில் இறங்கினார். பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட சிரமத்தின் பேரில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட அந்த நூலகத்தை திறந்து வைக்க அனுமதிக்காததன் மூலம் புலிகள் இயக்கமும் அரசும் தமிழ் மக்களுக்கு ஒரு தவறை இழைத்திருக்கின்றன.

பொது நூலகத்தை திறந்து வைக்க இடையூறு ஏற்படுத்தியதன் மூலம் புலிகள் இயக்கம் நிராயுதபாணியாக்கப்பட வேண்டும் என்ற அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

-இவ்வாறு மங்கள சமரவீர பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் கூறினார். (ஓ)

## சனசமூக நிலையத்துக்கு நூல் வழங்கும் நிகழ்வு

பருத்தித்துறை புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்திற்கு தமிழர் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை வழங்கவுள்ளார்.

இது தொடர்பான வைபவம் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சனசமூக நிலையத் தலைவர் அ.துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ் பல நோ.கூ.சங்கத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர் தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம் பெறும். (எ-8)

## பருத்தியடைப்பில் மீண்டும் மிதிவெடி

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு மாதிரிக் கிராமத்தில் குப்பை எரிக்கும போது மிதிவெடி ஒன்று வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் மாலை இக்கிராமத்தில் உள்ள வீடு ஒன்றின் சுற்றுப்புறம் துப்புரவு செய்யப்பட்டு குப்பை எரிக்கப்பட்ட போதே மிதிவெடி வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கிராமத்தில் இவ்வாறு வெடித்த மூன்றாவது மிதிவெடி இது எனவும். மேலும், இப்பகுதியில் மிதிவெடி மேலும் இருக்கலாம் என்றும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-73)

## பேச்சு குறித்து ஜனாதிபதி-பிரதமர் கலந்துரையாடல்

கொழும்பு,பெப். 15


கடந்தவாரம் ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் நடந்த 5ஆம் கட்டப் பேச்சின் விவரங்கள் தொடர்பாக ஜனாதிபதியும் பிரதமரும் நேற்று மாலை கலந்துரையாடினர்.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்த பிரதமா ரணில் விக்கிரமசிங்க பேர்லின் பேச்சில் ஆராயப்பட்ட விடயங்கள், அவற்றின் முன்னேற்றம் ஆகியவை தொடர்பாக ஜனாதிபதிக்கு விளக்கிக்கூறினார்.

அப்போது ஜனாதிபதியுடன் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமரும் பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் தொழில் நுட்ப அமைச்சர மிலிந்த மொறகொடவும் சமுகமளித்திருந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதர் அகாஷியுடன் ஜனாதிபதி பேச்சு நடத்தினார். (ஓ-3)

### மானிப்பாய் சம்பவத்தைக் கண்டித்து நகரில் நேற்று இடம்பெற்ற பேரணியின் சில காட்சிகள்....













எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1ஈ, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

# ஜொன்டி ரோட்ஸ் நீக்கம்

உலகக்கிண்ணப் போட்டிகளுக்கான தென்னாபிரிக்க அணியில் ஜொன்டி ரோட்ஸை நீக்குவதற்கு தேர்வுக்குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

இதனால், ரோட்ஸின் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை விரைவில் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. வலது கையில் ஏற்பட்ட காயம் காரணமாக ரோட்ஸ் மூன்று வார காலம் வரை போட்டிகளில், பங்குபற்ற முடியாது என முன்னர் அறிவிக்கப்பட்டது. சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு தம்மால் திரும்பி வர முடியும் என ரோட்ஸ் அறிவித்திருந்தார்.

எனினும், நேற்றுமுன்தினம் ரோட்ஸுக்குப் பதிலாக துடுப்பாட்ட வீரரான கிரேம் ஸ்மித்தை சேர்ப்பதற்கு தேர்வுக்குழுவினர் தீர்மானித்துள்ளனர். தேர்வுக் குழு உறுப்பினரும் ஜோன்டி ரோட்ஸின் முன்னாள் சகாவுமான பட்ஸிம் கொக்ஸ் இது தொடர்பாகக் கூறுகையில்:-

4 வாரங்கள் வரை அவர் விளையாடமுடியாது உள்ளார்.

முதல் போட்டியில் மேற்கிந்திய அணியிடம் தோல்வியுற்றதால், இனியும் போட்டிகளில் 'ரிஸ்க்' எடுப்பதற்கு தாம் தயாரில்லை.

- இவ்வாறு அவர் கூறினார்.

(ம-10)

SHARP Action of the day



'ஹற்றிக்' எடுத்த மகிழ்ச்சியில் மிதக்கும் வாஸ்.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் Browns
BROWNS ELECTORINICS

# மீண்டு வந்தது நியூஸிலாந்து

தென்னாபிரிக்காவுடனான தனது முதல் ஆட்டத்தில் அனைவரையும் ஆச்சரியப்படுத்தி அந்த அணியை வென்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி. ஆனால், தான் சந்தித்த இரண்டாவது ஆட்டத்தில் நியூஸிலாந்து அணியிடம் வாங்கிக் கட்டிக் கொண்டது. இதனையும் யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. இலங்கையிடம் பெற்ற முதல் தோல்வி மூலம் துவண்டுபோயிருந்த நியூஸிலாந்து அணிக்கு இந்த வெற்றி ஓர் ஊக்க மருந்தாக அமைந்திருந்தது.

போர்ட் எலிசபெத் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இந்த ஆட்டம் நடந்தது. இந்த நாணயச் சுழற்சியில் வென்ற மே.இந்தியத் தலைவர் ஹூப்பர் நியூஸிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார். வழக்கத்துக்கு மாறாக ஆரம்பத் துடுப்பாளர் பிளமிங்குடன் களமிறங்கியவர் அணியின் சுழல் பந்துவீச்சாளர் டானியல் விற்றோரி. நாதன் ஆஸ்லேக்குப் பதிலாக அவர்தான் தொடக்கத்தில் களமிறங்கினார். இறங்கிய வேகத்தில் பிளமிங் ஓட்டங்களைக் குவித்தார். விளாசுவார் என எதிர்பார்க்கப்பட்ட விற்றோரி மேற்கிந்தியப் பந்துகளில் திணறிக் கொண்டிருந்தார். 25 பந்துகளில் 4 பௌண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 25 ஓட்டங்களை விளாசினார் பிளமிங். டிலான் வீசிய பந்தை அடித்து அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் அவர். 42 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட் சரிந்தது. மேலும் 16 ஓட்டங்களைப் பெறுவதற்குள் விற்றோரியின் விக்கெட் சரிந்தது. சரித்தவர் டிராகஸ். விக்கெட்டைப் பிடுங்கி எறிந்தது பந்து. 58 ஓட்டங்களுக்கு 2விக்கெட் இழப்பு. பிளமிங்குக்குப் பதிலாகக் களமிறங்கியவர் ஆஸ்லே. அணியின் நம்பிக்கை நட்சத்திரம். இலங்கையுடனான ஆட்டத்தில் ஆரம்பத்திலேயே வாஸினால் 'ரன் அவுட்' செய்யப்பட்டு ஆடமுடியாமல் போனவர். அவருடன் இணைய வந்தவர் டைரிஸ். ஆனால், வந்த வேகத்திலேயே அவரை வெளியேற்றினார் டிராகஸ். 15 பந்துகளில் ஒரு பௌண்டரியுடன் அவர் பெற்றது 5 ஓட்டங்கள் மட்டுமே. 66 ஓட்டங்களுக்குள் தனது 3ஆவது விக்கெட்டை இழந்தது நியூஸிலாந்து. அவருக்குப் பதிலாக வந்தவர் அணியின் மற்றொரு நம்பிக்கை நட்சத்திரமும் சகலதுறை ஆட்டக்காரருமான கெய்ன்ஸ். ஆஸ்லேயும் கெய்ன்ஸும் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை சிறிது உயர்த்தினர். ஆனால், அவர்களாலும் அணியின் சரிவை ஒரேயடியாகத் தூக்கி நிறுத்த முடியவில்லை. இருவரும் இணைந்து 4ஆவது விக்கெட்டுக்காக 64 ஓட்டங்களைப் பெற்றனர். அணியின் எண்ணிக்கை 130ஐ எட்டியபோது நன்றாக ஆடிக்கொண்டிருந்த ஆஸ்லே ஆட்டமிழந்தார். ஹிண்ட்ஸின் பந்தின் பின்னால் விக்கெட் காப்பாளர் ஜேக்கப்ஸிடம் பிடி கொடுத்து, அவர் ஆட்டமிழந்தாக நடுவர் அறிவித்தார். ஆனால், அந்தத் தீர்ப்பு படுபிழையானது என்பது அந்த வீடியோ நாடாக்களை மீண்டும் மீண்டும் போட்டுப் பார்த்ததன் மூலம் தெரிய வந்துள்ளது. பந்து ஆஸ்லேயின் மட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 3 ஆட்டங்களில் குணரட்ன ஆடமாட்டார்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் புலஸ்தி குணரட்னவின் வலது கை விரலில் காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் இலங்கை அணியின் 3 போட்டிகளில் பங்குபற்ற முடியாதுள்ளார்.

நியூஸிலாந்துடனான போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டபோது குணரட்ன காயமடைந்தார்.

நேற்று நடைபெற்ற பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் அவர் பங்குபற்றவில்லை.

எனினும், மேற்கிந்திய, தென்னாபிரிக்க அணிகளுடனான போட்டிகளில் அவர் பங்குபற்றுவார் என அணி முகாமையாளர் அஜித் ஜயசேகர தெரிவித்துள்ளார். இப்போட்டிகள் பெப்ரவரி 28ஆம், மார்ச் 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

29 வயதான புலஸ்தி குணரட்ன 8 வருட காலம் முதல்தரப் போட்டிகளில் பங்குபற்றியபின் இலங்கை அணியில் சேர்க்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-10)




## இந்திய அணியிலிருந்து கைவ் நீக்கம்!

ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இருந்து இந்திய அணி வீரர் முஹமட் கைவ் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக சகலதுறை ஆட்டக்காரர் சஞ்சய் பங்கார் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் எதிர்பார்த்தளவிற்கு கைவ ஆடவில்லை என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அணித் தலைவர் கங்குலியும் பயிற்சியாளர் ஜோன் ரைட்டும் இணைந்தே இந்த முடிவை எடுத்ததாகவும் கூறப்பட்டது. சுழல் பந்து வீச்சாளர்களை எதிர் கொள்வதில் ஆஸ்திரேலிய அணி பலவீனமானது என்பதால் தொடர்ந்தும் அணியில் இரு சுழல் பந்துவீச்சாளர்களை வைத்திருப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம)

# 'ஹற்றிக்' எடுத்தார் வாஸ்!

இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளர் சமிந்த வாஸ், பங்களாதேஷுடன் நேற்று நடந்த ஆட்டத்தில் மூன்று விக்கெட்டுக்களை அடுத்தடுத்து வீழ்த்தி 'ஹற்றிக்' சாதனை நிகழ்த்தி வரலாறு படைத்துள்ளார்.

பங்களாதேஷின் முதல் ஓவர் பெறுபேறு 5 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்கள் இழப்பு என்பதாகும்.



வாஸின் முதலாவது பந்திலேயே பங்களாதேஷ் ஆரம்பத் துடுப்பாளர் ஹனான் சர்ஹாரின் விக்கெட் பிடுங்கி எறியப்பட்டது.

தொடர்ந்து வந்த மொஹமட் அஷ்ரபுள், வாஸின் பந்தை வாஸிடமே பிடிகொடுத்து வெளியேறினார்.

மூன்றாவதாக வந்தவர் எஷானுள் வாஸின் பந்தில் 2ஆம் 'சிலிப்பில்' நின்ற மஹேல ஜவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இது வாஸின் 'ஹற்றிக்' விக்கெட். தன் வாழ்நாளில் முதற்றடவையாக ஹற்றிக் சாதனை நிகழ்த்தினார்.

அவரது இந்த அபாரமான பந்துவீச்சு பங்களாதேஷுக்கு அதிர்ச்சியான ஆரம்பத்தை அளித்தது.

கிரிக்கெட் வரலாற்றில் - டெஸ்ட் அல்லது ஒரு நாள் ஆட்டங்களில் - ஆட்டம் ஆரம்பித்த முதல் மூன்று பந்துகளிலேயே 'ஹற்றிக்' சாதனை நிகழ்த்தப்பட்டது இதுதான் முதல் தடவை.

உலகக் கிண்ணப் போட்டிகளில் 'ஹற்றிக்' சாதனை புரிந்த மூன்றாவது வீரர் வாஸ் ஆவார். 1987 இல் இந்தியாவின் சேத்தன் சர்மா நியூஸிலாந்துக்கு எதிராக முதலில் இந்தச் சாதனையை நிகழ்த்தினார். 1999இல் பாகிஸ்தானின் சுழல் பந்துவீச்சாளர் சக்லைன் முஷ்டாக் சிம்பாப்வேக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

# தாயார் பெயரை பயன்படுத்தி தப்பிப்பதற்கு முயலவேண்டாம்: வோர்னுக்கு எச்சரிக்கை

சிட்னி,பெப்.15

"தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து உட்கொண்ட விடயத்தில், தனது தாயார் பெயரை சொல்லி ஷேன் வோர்ன் தப்பிக்க நினைக்கக் கூடாது. சாக்குப்போக்கு கூறக் கூடாது." - இவ்வாறு ஆஸ்திரேலிய மருத்துவசங்கத் தலைவர் கொரின் பெல்ப்ஸ் கூறினார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர வீரராக இருந்த ஷேன் வோர்ன் மீது போதை மருந்து குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது. இதனால் உலகக் கிண்ண போட்டியில் இருந்து வோர்ன் வெளியேற்றப்பட்டு, தாயகம் திரும்பினார்.

குற்றச்சாட்டு வெளியானதன் பின்னர் வோர்ன் இது குறித்து கூறும்போது, தனது தாயார்தான் இந்த மருந்தைக் கொடுத்ததாகக் கூறினார்.

தன்னுடைய தாயார் மாத்திரை கொடுத்ததாக வோர்ன் கூறியுள்ளதை பெல்ப்ஸ் கடுமையாக கூறியதோடு, இது முட்டாள்தனமானது என்றும் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய செய்தி நிறுவனமொன்றுக்கு பெல்ப்ஸ் இது குறித்து கூறுகையில், தனது தவறுக்கு தாயாரின் பெயரை பயன்படுத்தி வோர்ன் சாக்குப்போக்கு கூறக்கூடாது என்று கூறினார்.

(ம-10)

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns

ASIAN
COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொக்குவில் மேற்கு J/127

கிராம உத்தியோகத்தர்

## திரு.த.இரத்தினேஸ்வரன்

அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை நன்கு மேலும் தொடர எமது நல்வாழ்த்துக்கள்.

*காந்திஜி சனசமூக நிலையம், கொக்குவில் மேற்கு.* (14493) – *நிர்வாகிகள், பொதுமக்கள்.*

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தாயின் மடியில் 14 - 04 - 1949



ஆண்டவன் அடியில் 17 - 01 - 2003

## அமரர் வையாபுரி தனபாலசிங்கம்

*(றேடியோ மாஸ்ரர், கிருபா எலக்ரோனிக் சென்ரர், பருத்தித்துறை.)*

17.01.2003 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் வையாபுரி தனபாலசிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோர்க்கும், பல்வேறு வகைகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் -

நாளை (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை எமது வீட்டில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இத்தியடி, சங்கத்தானை, சாவகச்சேரி.* மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (C/26523)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 10 - 03 - 1934



உதிர்வு 16 - 01 - 2003

## திருமதி தம்பையா திரேசம்மா

*(முகமாலை)*

கடந்த (16.01.2003) வியாழக்கிழமை அன்று எம்மைவிட்டு பிரிந்து இறைவனடி சேர்ந்த எமது தாயாரின் மரணச் செய்தி அறிந்து வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து இறுதிச் சடங்குகளிலும் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் வெளிநாடுகளிலிருந்தும், நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் ஆறுதலளித்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் -

இன்று (15.02.2003) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சடங்கில் பங்குபற்றி அவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம். திருப்பலி மாலை 5.00 மணிக்கு கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டி புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெறும் என்பதையும் அறிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
த.ஞானப்பிரகாசம் (அதிபர், மகன்),
அ.டொமினி (மருமகன்)
முகமாலை, எழுதுமட்டுவாழ். (14451)

*பிரிவால் துயருறும்:*
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# நூல் வெளியீடு

கொழும்புத்துறை,பெப்.15

யாழ்.திருமறைக் கலாமன்றத்தினரால் வெளியிட்டு வைக்கப்படும் 'கம்பன் மகன்' நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். மறைக்கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யோன்சன் ராஜ்குமார் எழுதிய பாடலுக்கு பேக்மன் செயராசா இசை சேர்த்துள்ளதாகவும் எதிர்வரும் மார்ச முதலாம், 2 ஆம் திகதிகளில் திருமறைக் கலாமன்ற அரங்கில் இக் கூத்து மேடையேற்றப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-30)

# இரவுநேர வகுப்புகள்

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் மீண்டும் இரவுநேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு இப்பகுதி பல்கலைக் கழக மாணவர்களால் இரவு வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவதாக பங்குத் தந்தை எஸ்.யேசுரட்ணம் அடிகள் தெரிவித்தார். இடம்பெயர்வின் பின்னர் நிறுத்தப்பட்டிருந்த இந்த வகுப்புக்கள் தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-30)

# நூல் நிலையத்தை திருத்தக் கோரிக்கை

கைதடியிலுள்ள சாவகச்சேரி பிரதேச சபைக்குரிய பொது நூலகம 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழ்நிலை காரணமாக முற்றாகச் சேதமடைந்தது. அங்கிருந்த பெறுமதியான பல அரிய நூல்களும் அழிந்து போய்விட்டன.

2001ஆம் ஆண்டு கைதடியில் மக்கள் மீளக் குடியமரத் தொடங்கிய வேளை இந்நூலகத்தை புனரமைத்துத் தரும்படி சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. திருத்தத்திற்காக ஏழு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் திருத்த வேலை தொடங்கப்படும் என்றும் உறுதி அளிக்கப்பட்டது. கைதடிப்பகுதி மக்களை ஒன்றிணைத்து "நூலக அபிவிருத்திச்சபை" என ஒரு குழுவும் தெரிவுசெய்யப் பட்டது.

ஆனால், இதுவரை எதுவித திருத்த வேலைகளும் நடந்ததாக இல்லை. தற்போது இக்கட்டடத்தில் இருக்கும் எஞ்சிய மரங்களும் திருடர்களின் கைவரிசைக்கு ஆளாகி வருகின்றது. இனியாவது சாவகச்சேரி பிரதேசசபை கவனமெடுத்து இக் கட்டடத்தை புனரமைக்க ஆவன செய்ய வேண்டுமென இப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான மாணவர்களைக்கொண்ட கைதடிப்பகுதிக்கு உள்ள ஒரே ஒரு பொதுநூலகம் இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.(ஏ-75)


# தேவை

ஓவ்செற் வேலை தெரிந்தவர்களும் பைண்டிங் வேலை தெரிந்தவர்களும் தேவை.

தாரணி பதிப்பகம் அன் ஆட்ஸ்
(மனோகரா தியேட்டர் அருகில்)
319, K.K.S.வீதி,
யாழ்ப்பாணம். (C/26535)

DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 350/=.

BHARATHI PATHIPPAKAM
OFF-SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
T.PHONE: 021 222 3081 (C-26534)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நுணாவில் மேற்கு (J/308)

கிராம உத்தியோகத்தர்

திருவாளர்

## வை.துரைசிங்கம்

அவர்கள் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்வுடன பாராட்டுவதுடன், அவர் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெறுவதுடன் அவரது சேவை எமது பகுதிக்குத் தொடர்ந்தும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

*நுணாவில் மேற்கு அம்பாள் சனசமூக நிலையம்.*
*நுணாவில் மேற்கு விவசாய சம்மேளனம்,*
(14487) *நுணாவில் வாழ் மக்கள்.*

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் அதிபர் திரு.த.ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி தம்பையா திரேசம்மா

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்வதுடன் அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
(14483) *பாசையூர் சென்.அன்ரனீஸ் மகளிர் வித்தியாலயம்.*

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## நாகலிங்கம் இரவீந்திரராசா

(உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களம்,முல்லைத்தீவு)

மலர்வு 25.05.1956 உதிர்வு 03.02.1996

திதி: பூர்வபக்க திரயோதசி (15.02.2003)

ஆண்டுகள் ஏழு சென்றதுவே
அன்பு ரவி நீர் எமைப் பிரிந்து!
ஏங்கி நாம் இங்கு தவிக்கின்றோம்
எம்முடன் இணைந்திட வாரீரோ?

*உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.* (14485) சகோதர சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கிளையின் முன்னாள் உதவி முகாமையாளரும் திருநெல்வேலி இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளருமாகிய

## இராசையா இரத்தினகோபாலு

அவர்கள் 12.02.2003 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை வங்கி, சுன்னாகம் கிளை. (14488) முகாமையாளரும், ஊழியர்களும்.

# மரண அறிவித்தல்

## இராசையா இரத்தினகோபாலு

*(முகாமையாளர், இலங்கை வங்கி, திருநெல்வேலி)*

வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், 'பிருந்தாவனம்', கரணவாய் கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமான அமரர் கந்தையா இராசையா - தங்கம்மா தம்பதியரின் தலைமகனும் திருமதி பத்மாசினியின் இன்னுயிர்க் கணவரும் செல்வன் தவரங்கன், செல்வி விஜயாதிரை ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் வீரகத்தி (விதானையார்) - விசாலாட்சி தம்பதியரின் மருமகனும் திருமதி பரமேஸ்வரி மகேஸ்வரன் (லண்டன்), திருமதி இராசேஸ்வரி சிவநேசன் (கனடா), இராசதுரை (கனடா), டாக்டர் திருமதி சிவனேஸ்வரி சிவதாஸ் ஆகியோரின் உடன் பிறந்த உயிர்ச் சகோதரனும் திருமதி கமலாசினி தவலிங்கம், வல்லிபுரநாதன் (லண்டன்), செல்வி யோகாசினி (லண்டன்), மகேஸ்வரன் (லண்டன்), சிவநேசன் (கனடா), திருமதி நிர்மலாதேவி இராசதுரை (கனடா), டாக்டர் சிவதாஸ் (யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மதிப்பான மைத்துனரும் தவலிங்கம் (ஓய்வு பெற்ற பொலிஸ் உதவி அத்தியட்சகர்) அவர்களின் சகலனும் திருமதி திருத்தேவி வல்லிபுரநாதனின் சகோதரரும் ஆகிய இராசையா இரத்தினகோபாலு (முகாமையாளர், இலங்கை வங்கி, திருநெல்வேலி) அவர்கள் 12.02.2003 புதன்கிழமை பி.ப. 5.00 மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் கரவெட்டி, சோனப்பு மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'பிருந்தாவனம்', கரணவாய் கிழக்கு, கரவெட்டி.*

தகவல்:
திருமதி பத்மாசினி
இரத்தினகோபாலு
(மனைவி)

(14484)


# இந்திய பரம்பரை ஜோதிடர்




அருள்வாக்கு

## அம்பிகா அம்மா

கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும். ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்.

26.02.2003 வரை மட்டும் தங்கி இருப்பார்கள்.
எல்லா நாளும் சாத்திரம் கூறப்படும்.

சந்திக்குமிடம்:
மடோனா லொட்ஜ்
121, கஸ்தூரியார் வீதி,
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ்/லிங்கன் கூல்பார் அருகில்)
யாழ்ப்பாணம்.



(14492)

உதயன்

## சிறுவர்களுக்கு விடிவு!

எதிர்வரும் மார்ச் 18முதல் 21வரை அரச தரப்புக் குழுவுக்கும் விடுதலைப் புலிகள் தரப்புக் குழுவுக்கும் இடையே ஜப்பானில் 6ஆவது சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

நேற்றுமுன்தினம் அமைச்சரவை முடிவுகளை ஊடகவியலாளர்களுக்கு பேராசிரியர் பீரிஸ் அறிவித்த போது ஜப்பான் மாநாடு பற்றியும் குறிப்பிட்டார்.

அரசியல் தீர்வுக்கான அடிப்படைகள், அதிகாரப் பரவலாக்கல், அதற்கான நிதியைப் பெறும் வழிவகைகள் ஆகியவை பற்றி 6ஆவது சுற்றுப்பேச்சுக்கள் ஜப்பானில் நடைபெறும்போது ஆராயப்படும். இதற்குப் புலிகளும் இணங்கியிருக்கிறார்கள் என்று பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களைக் குடியமர்த்துவது சம்பந்தமான விடயத்தில் இன்னும் தீர்வுகாணப்படவில்லை. உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தை அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி, ஓய்வுபெற்ற இந்திய இராணுவ உயர் அதிகாரியும் இராணுவ விடயங்களில் நிபுணருமான சதீஸ் நம்பியார் ஆராய்ந்து வருகிறார். அவர் தனது இறுதி ஆலோசனையையும் முடிவையும் இன்னும் அரசுக்குத் தெரிவிக்கவில்லை.

இந்தநிலையில், ஜப்பான் பேச்சுக்களில் அரசியலை எடுத்துக்கொள்ளப் புலிகள் விரும்புவார்களா என்பது கேள்வி. உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள யாழ்.மக்களின் சொந்த வீடுகளில் அவர்களைக் குடியமர்த்தி, இயல்பு நிலையை ஏற்படுத்திய பின்னர்தான் அரசியல் பேசலாம் என்பது புலிகளின் நிலைப்பாடு. இதை அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

அது ஒருபுறம் இருக்க பேர்ளினில் நடைபெற்ற ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்களில் மற்றொரு நல்ல காரியம் நடந்தது என்றும் பேராசிரியர் பீரிஸ் குறிப்பிட்டார்.

புலிகள் இயக்கத்தில் சிறுவர் படை என்ற பேச்சுக்கே இடமில்லை. எக்காரணம் கொண்டும் சிறுவர்களைச் சேர்த்துக்கொள்வதில்லை என்று புலிகள் தரப்பினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது என்றார் அவர்.

முன்னர் இயக்கத்தில் எப்படியோ சேர்க்கப்பட்டு, இப்பொழுது புலிகளால் விலக்கப்பட்டு வரும் சிறுவர்களுக்கும் புதிதாக இயக்கத்தில் சேரவிரும்பி வரும் சிறுவர்களுக்கும் 'யுனிசெவ்' என்ற சிறுவர் நிறுவனத்தின் மூலம் புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பேராசிரியர் பீரிஸ் அறிவித்தார்.

புலிகளை ஜென்ம விரோதிகளாகக் கருதி வருபவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. சிறுவர்களைப் புலிகள் தங்கள் படையில் சேர்த்துக்கொள்கிறார்களே என்று சதா குரல் எழுப்பியும் புலிகள் மீது குற்றஞ்சாட்டியும் வருபவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அவர்கூட சிறுவர் தொடர்பாகப் புலிகள் அளித்துள்ள உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்.

கடந்த மாதம் தாய்லாந்தில் நடைபெற்ற நான்காவது சுற்றுப்பேச்சுக்களின் முடிவிலேயே புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியரும் பேச்சுக்களில் புலிகள் தரப்புக் குழு தலைவருமான அன்ரன் பாலசிங்கம் சிறுவர் விவகாரத்தை ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

"நாங்கள் சிறுவர்களை இயக்கத்தில் சேர்ப்பதை எப்பொழுதோ நிறுத்திவிட்டோம். பிழையான தகவல்களைத் தந்து சேர்ந்த சிறுவர்களை இப்போது பெற்றோரிடம் ஒப்படைத்து வருகிறோம்.

"சிறுவர்கள் தாமாகவே எமது இயக்கத்தில் சேர விரும்பி வருகிறார்கள். அதற்கு அவர்களின் பஞ்சம், பசி, பட்டினி, ஏழ்மை, வாழவழியின்மை முதலானவை காரணங்களாக அமைகின்றன.

"விடிவு தேடி எங்களை நாடிவரும் சிறுவர்கள் எங்களோடு இணைந்துகொள்கிறார்கள். இவர்களைச் சேர்த்துக்கொள்வது ஆள்திரட்டும் நிலையங்களில் அல்ல, நாங்கள் நடத்தும் சமூக நல நிலையங்களில்தான்.

"16முதல் 20 சமூக நல நிலையங்களை நடத்துகிறோம். அங்கு ஆயிரக்கணக்கானோருக்கு உணவு அளிக்கப்படுகிறது.

"அவர்களுடைய கஷ்டங்களுக்குத் தீர்வுகாணவும் அவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கவும் சர்வதேச உதவிகளை நாங்கள் நாடிநிற்கிறோம். 'யுனிசெவ்' நிறுவனத்தில் உதவியையும் கோரவிருக்கிறோம்." - இப்படி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

அவர் அப்போது கூறியது இப்போது கைகூடுகிறது.

இந்தச் சிறுவர்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தின் மூலம் புனர்வாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பேராசிரியர் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

விடிவு தேடும் சிறுவர்களுக்கு 'விடிவு வருகிறது.

# வேலையற்ற 10ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச செலவில் பயிற்சி, தொழில்வாய்ப்பு

## அமைச்சரவை வாராந்தக் கூட்டத்தில் தீர்மானம்

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு அரச செலவில் பயிற்சியும், தொழில்வாய்ப்பும் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கடந்த புதனன்று நடைபெற்ற அமைச்சரவையின் வாராந்தக் கூட்டத்தில் இது தொடர்பாகத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து அமைச்சரவைப் பேச்சாளரான ஜீ.எல்.பீரிஸ் ஊடகங்களுக்கு செய்திக் குறிப்பு ஒனறை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள தர்மானங்கள் வருமாறு:-

**பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம்**

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டம் தளர்த்தப்படும். நாட்டில் அமைதியும் சுமுக நிலையும் ஏற்பட்டுள்ளதால் இச்சட்டத்தில் காணப்படும் கடுமையான பகுதிகள் நீக்கப்பட்டு, பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் இச்சட்டத்தில அவசியமான மாற்றங்கள் கொண்டுவரப்படும். இது தொடர்பான திருத்தச சட்டவரைவு வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

**தொழில் வாய்ப்புக்களும் கிராமிய பொருளாதார அபிவிருத்தியும்**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் கிடைத்துள்ள 6 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் 20 ஆயிரம் சிறுகைத்தொழில் மையங்கள் அமைக்கப்படும். தொழில் முயற்சியும ஆர்வமும் உள்ள பலர் மூலதனம் இல்லாமல் தொடர்ந்தும் வறுமைப்படடவர்களாகவே இருக்கின்றனர். எனவே, இவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் கிராமிய மட்டத்தில் இருபதாயிரம் சிறுகைத்தொழில் மையங்கள் அமைக்கப்பட்டு அதற்கான நிதி மற்றும் மூலதனப் பொருளகளும் வழங்கப்படும். தொழில் அமைச்சும், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சும் இத்திட்டத்தைச் செயற்படுத்தும். இதன் மூலம் 60 ஆயிரம் இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பினைப் பெறுவதோடு கிராமிய மட்டத்தில் பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படும்.

**மகளிர் பாதுகாப்புச் சட்டம்**

பல்வேறு துறைகளிலும் பணியாறறும் பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாபபது தொடர்பான சட்டமூலம் வெகுவிரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். பொது இடங்களிலும், தொழில்புரியும் இடங்களிலும் பெண்களுக்கு ஏற்படும் இமசைகள், அநீதிகள், பாகுபாடுகள், பாலியல் சேஷ்டைகள் என்பனவற்றில் இருந்து பாதுகாக்கவும், இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இச்சட்டம் வழிவகுககும்.

**பட்டதாரிகளுக்கு அரச செலவில் பயிற்சியும், தொழில் வாய்ப்பும்**

தொழில் வாய்ப்புக்களின்றி இருககும் பட்டதாரிகளுககு தொழில் வாய்பபுக்களை ஏற்படுத்தும் வகையில் புதிய திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும். நேரடியாக தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள், ஆங்கில மொழி, கணனிப் பயிற்சி, முகாமைத்துவம் ஆகிய துறைகளில் விசேட பயிற்சிகள் வழங்கப்படும். இப்பயிற்சிநெறிகளுக்கான அனைத்து செலவீனங்களும் அரசால் ஏற்கப்படும். முதற்கட்டமாக 9 முதல் 10 ஆயிரம் பட்டதாரிகள் இந்தப் பயிற்சி நெறிகளுக்குத் தெரிவுசெய்யப்படுவர். பயிற்சியின் பின் இவர்களுக்கு தொழில்வாய்ப்புக்களும் ஏறபடுத்திக் கொடுக்கப்படும்.

**எரிபொருள்கள் பாவனையாளர்களுக்கு நிவாரணம்**

உலக சந்தையில் எரிபொருள்களுக்கான விலைகள் அதிகரிக்கும்போதும், வளைகுடாவில் யுத்தம் ஒன்று ஏற்பட்டாலும் தட்டுப்பாடின்றி பொதுமக்களுக்கு எரிபொருள்களை விநியோகிக்கவும், விலை அதிகரிப்பில் இருந்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. எவ்வாறான நிவாரணம் வழங்கப்படும் என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக அறிவிப்பார். (எ)

# ஊர்காவற்றுறை 'பாதை சேவை' திங்கள்முதல் தினம் இரு தடவைகள்

காரைநகர்,பெப்.15

காரைநகருக்கும், ஊர்காவற்றுறைக்கும் இடையில் கடற படையினரால் நடத்தப்பட்டு வந்த 'பாதை சேவை' நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் இரு சேவைகளாக குறைக்கப்படவுள்ளதாகக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இதுவரை காலமும் ஐந்து தடவைகள் இலவச சேவையை நடத்திய கடற்படையினர் தற்போது இரண்டு சேவைகளாகக் குறைப்பதற்கு எரிபொருள் பற்றாக்குறையே காரணம் எனத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பாதை சேவையைப் பொறுப்பேற்று நடத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகாரி சபையிடம் தாம் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்ததாகவும் -

எனினும், இதுவரை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் 'பாதை சேவை' பொறுப்பேற்று நடத்த முன்வரவில்லை என்றும் - கடற்படையினர் பொதுமக்களுக்கான அறிவிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

திங்கட்கிழமை தொடக்கம் காலை 8.00 மணிக்கு காரைநகரில் இருந்து ஊர்காவற்றுறைக்கும் பிற்பகல் 2.45மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து காரைநகருக்கும், பின்னர் மாலை 5.30 மணிக்கு காரைநகரில் இருந்து ஊர்காவற்றுறைக்கும், 5.45மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து காரைநகருக்கும் என்ற நேர அட்டவணையில் பாதை சேவை நடைபெறும்.

இது தொடர்பான அறிவித்தல் ஒன்றை கடற்படையினர் பாதையில் தொங்கவிட்டுள்ளனர்.

காரைநகரில் தற்போது பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இதுவரை தினந்தோறும் காரைநகருக்கும் - ஊர்காவற்றுறைக்கும் இடையில் ஐந்து தடவைகள் நடத்தப்பட்டுவந்த 'பாதை சேவை' மக்களுக்கு போதியதாக அமையவில்லை.

இந்த நிலையில் தற்போது இரண்டு சேவையாக குறைக்கப்பட்டிருப்பது பொதுமக்களுக்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (எ-73)

### களஞ்சிய அறையை உடைத்து

## நூலகக் கதவுகளின் சாவிகள் அபகரிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ்.பொது நூலகக் கட்டடத்துககுள் கடந்த புதன்கிழமை இரவு வாள்கள் சகிதம் புகுந்த இருவர் அங்கிருந்த களஞ்சிய அறையை உடைத்து நூலகத்தின் அனைத்து கதவுகளுக்குமான சாவிகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

கட்டடத் திணைக்களப் பாதுகாப்பு உத்தியோகத்தர் கடமையில் இருந்தபோதும் அவரை மிரட்டிவிட்டே சாவிகள் அபகரித்துச் செல்லப்பட்டன.

இதனையடுத்து, பொலீஸாரும், இராணுவத்தினரும் நூலகக் கட்டடத்தைச் சுற்றிப் பாதுகாப்புப பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ஜ-10-17)

## ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது மந்திகையில் குண்டு வீச்சு

வடமராட்சி,பெப்.15

மந்திகையிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகம்மீது நேற்றுமுன் தினமிரவு 9.15 மணியளவில் இனந்தெரியாதோரால் குண்டுகள் வீசப்பட்டன.

அலுவலகத்துக்கு வெளியே வீழ்ந்த இக்குண்டுகளில் ஒன்று உடனடியாக வெடித்தது. மற்றையது வெடிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து அலுவலகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் பருத்தித்துறை பொலீஸாருக்கு தகவல் கொடுத்தனர். பருத்தித்துறை பொலீஸ் நிலையத்திலிருந்து மேலதிக பொலீஸார் வந்து வெடிக்காத குண்டை பாதுகாப்பாக அன்றிரவு 11 மணியளவில் வெடிக்கவைத்தனர்.

இச்சம்பவத்தினால் அலுவலகத்துக்குள் இருந்தவர்களுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. (ம-173)

**நாளை**

மாசி 04
ஞாயிற்றுக்கிழமை
(16.02.2003)
திதி : சதுர்த்தசி
காலை 7.30 வரை.
நட்சத்திரம்: ஆயிலியம்
முன்னிரவு 11.11 வரை.
பூரணை விரதம்
சுபநேரம் : 9.33 - 11.03
ராகுகாலம் : 5.03 - 6.33
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

கௌரவமில்லா மனிதன இறந்தவரிலும் மிக இழிந்தவனாவான்.

### வலி.தெற்கு

## பிரதேச சபைத் தலைவரை கைதுசெய்ய உத்தரவு!

யாழ்ப்பாணம்,பெப்.15

வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி. உறுப்பினருமான கே.கமலசேகரனைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு மல்லாகம் நீதிவான், சுன்னாகம் பொலீஸாருக்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த தேர்தல் காலத்தில் தம்மை கொலைசெய்ய கமலசேகரன் முயன்றதாகத் தெரிவித்து ஐ.தே.கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட எஸ்.செல்வராசா தொடர்ந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணைக்காக கமலசேகரன் மன்றில் ஆஜராகாததை அடுத்து நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ஜ-3)

## மாதிரிக் கிராமமாக மட்டுவில் வடக்கு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மட்டுவில் வடக்கு (ஜே/313) கிராம சேவையாளர் பிரிவு, மாதிரிக் கிராமமாக விருத்திசெய்யப்படவுள்ளது

மேற்படி மாதிரிக்கிராம அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை மட்டுவில் வடக்கு கிராமசேவை உத்தியோகத்தர் சி.கனகரத்தினம் தலைமையில் மட்டுவிலில் நடைபெற்றது. மாதிரிக்கிராமம் தொடர்பான திட்ட நடைமுறைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழக செயற்றிட்ட அதிகாரி சி.விக்கினேஸ்வரன் எடுத்துக்கூறினார்.

தென்மராட்சியில் கடந்த 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் இந்தக் கிராமம் முற்றாக அழிவுற்றது. அதுமட்டுமன்றி, இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 380 குடும்பங்கள் அடிக்கடி இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் மற்றும் இடம்பெயர்வுகள் காரணமாக பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்நோக்கினர்.

இவ்வாறு பாதிப்படைந்த குடும்பங்கள் தொடர்பான விவரங்கள் அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக் கழக தொண்டர்களால் வீடு வீடாகச் சென்று திரட்டப்பட்டன.

இவ்வாறு திரட்டப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் குடும்பமொன்றிற்கு புதிய வீடு அமைக்க ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், வீடு திருத்தம் செய்வதற்கு 75 ஆயிரம் ரூபாவும், வீட்டுப் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாவும், மலசலகூடம் திருத்துவதற்கு நாலாயிரம் ரூபாவும், கிணறு கட்டுவதற்கு ஒரு லட்சம் ரூபாவும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-31)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோவிலாக்கண்டி J/296
கிராம உத்தியோகத்தர் திருவாளர்
**கந்தையா ஸ்ரீ விக்கினேஸ்வரராசா**

அவர்கள் தரம் Iஇற்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்வுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவர் இன்னும் பல பதவி உயர்வுகள் பெற்று சிறப்படைய வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கம்,
செல்வா சனசமூக நிலையம்,
கோவிலாக்கண்டி.

(14473)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**5ஆம் ஆண்டு** | **31ஆம் நாள்**





அமரர்
**பொ.கணபதிப்பிள்ளை**

திருமதி
**கணபதிப்பிள்ளை செல்லம்மா**

10.02.1925 ⟷ பிறப்பு ⟷ 06.04.1933
28.07.1997 ⟷ இறப்பு ⟷ 16.01.2003

16.01.2003 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி கணபதிப்பிள்ளை செல்லம்மா அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று மாசி மாதம் 3 ஆம் நாள் (15.02.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியம் காலை 5.00 மணிக்கும், மதியபோசனம் நண்பகல் 12.00 மணிக்கும் நடைபெறவுள்ளதால் இவ்வைபவத்திற் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'உதய பவனம்',*
*அல்வாய் வடமேற்கு,*
*திக்கம்.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(14274)

## Situations Vacant - The HALO Trust

### Office Manager

Office Manager with at least 3 years experience needed to run a busy office, administering over 100 staff.

*Requirements:*
Self motivated and dedicated
Experienced in accounting and administrative procedures.
Thorough knowledge of MS Office
Excellent English, both verbal and written.
Up to 50,000 R's. PCM.

### Office Assistant

Office Assistant with at least 12 months experience. Must be self motivated and have experience of accounting. Excellent English and computer skills essential.
Up to 25,000 R's. PCM

### சிரேஷ்ட மருத்துவர்

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பெரும் உடற்காயங்கள், மன அதிர்ச்சி போன்ற நோய்களைக் கையாள்வதில் அனுபவமும் திறமையும் சிறந்த பயிற்சிகளை வழங்கும் ஆற்றலும் கொண்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் வைத்திய கலாநிதியாகவோ அல்லது தாதியாகவோ இருக்கவேண்டும். தெரிவுசெய்யப்பட்டால் அரசசார்பற்ற நிறுவனம் தொடர்பாக மருத்துவம் சார்ந்த துறையில் சகல விடயங்களையும் மேற்பார்வை செய்யவேண்டும். மருந்து வகைகளும் மருந்து விநியோகமும், களஞ்சியப்படுத்தலும் நிர்வகித்தலும், பயிற்சியளித்தல் பயிற்றப்பட்ட பணியாளர் தொடர்பான தொடர் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் ஆகியன முக்கிய பொறுப்புகளாகும்.
ரூபா 25,000/- வரை மாதாந்தச் சம்பளம் வழங்கப்படும்.

### மெக்கானிக்

டீசல் மற்றும் ஹைட்ரோலிக் இயந்திரங்கள் தொடர்பான தெளிவான அறிவுடைய, அனுபவமிக்க இயந்திர மெக்கானிக் தேவை. சங்கிலியில் செயற்படும் (புல்டோசர் போன்ற) வாகனங்கள் மற்றும் மண்வாரி தொடர்பான அனுபவங்கள் மேலதிக தகைமைகளாகும்.
ரூபா 20,000/- வரை மாதாந்தச் சம்பளம் வழங்கப்படும்.

### சாரதிகள்

"ஏ" வகுப்பு சாரதி அனுமதிப்பத்திரமுடைய 5 சாரதிகள் தேவை.
ரூபா 10,000/- வரை மாதாந்தச் சம்பளம் வழங்கப்படும்.

**HALO Trust**
655, நாவலர் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(14418)

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள் நாளை ஞாயிறுக்கிழமை காலை 5மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்நிகழ்வு நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும். (எ-9)

## மட்டக்களப்பில் தொடர்ச்சியாக மழை

களுவாஞ்சிக்குடி, பெப். 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் தொடக்கம் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால், தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பட்டிப்பளை, போரதீவுப் பற்று பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பல ஏக்கர் நெற்காணிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தற்போது அறுவடை பல இடங்களிலும் நடைபெற்று வருவதால் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மூன்று தடவைகள் ஏற்பட்ட வெள்ளத்தினால் நெற்காணிகள் பாதிக்கப்பட்டமையினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## கல்வியியற்கல்லூரி சுற்றுமதில்களில் ஓவியங்கள்

யாழ்ப்பாணம், பெப். 15

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் சுற்றுமதில்களில் வர்ணச் சித்திரங்களைத் தீட்டும் செயற்பாடுகளில் கல்லூரி மாணவர்களே ஈடுபட்டுள்ளனர்.

கல்லூரி முன்றலின் சுவர்களில் மாணவர்கள் நவீன முறையிலான ஓவியங்களை வரைந்து அழகுபடுத்தி வருகின்றனர். (எ-9)

## லஞ்ச ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர் நியமனம்

கொழும்பு, பெப். 15

உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசரான யூ.டி.இலட்.குணவர்த்தன லஞ்ச குற்றச்சாட்டுகள் விசாரணை ஆணைக்குழுவில் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படவிருக்கின்றார். அவரது நியமனம் குறித்து அரசமைப்புச்சபை ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்திருக்கிறது.

இந்த ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராகவிருந்த ரி.என்.அபேவீர காலமானதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே குணவர்த்தன நியமிக்கப்படவிருக்கிறார். (எ)

## சமுர்த்தி வங்கி இன்று திறப்பு

தென்மராட்சி, பெப். 15

தென்மராட்சிப் பிரதேச வடவலய (வலயம் நான்கின்) சமுர்த்தி வங்கி இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வரணி சந்தைக்கு அருகில் உள்ள தனியார் கட்டடத்தில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந்த வங்கிக்குரிய ஆவணங்கள், தளபாடங்கள் அனைத்தும் கடந்த மாதம் சமுர்த்தி ஆணையாளர் அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

இந்த வங்கிக்குரிய பணியாளர் குழுவும் அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

(எ-117)

## பரீட்சை மீளாய்வில் 2 மாணவர் சித்தி

யாழ்ப்பாணம், பெப். 15

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் மீளாய்வுக்கு விண்ணப்பித்த யாழ். மத்திய கல்லூரியின் இரு மாணவர்களுக்குரிய பெறுபேறு கிடைத்துள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்த பின்பு வெட்டுப்புள்ளிக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற 9 மாணவர்களின் பெறுபேறுகள் குறித்து மீளாய்வுக்கு விண்ணப்பித்ததாகவும் -

அவர்களில் இருவர் சித்தியடைந்துள்ளதாக பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் -

கல்லூரியின் அதிபர் கஜேந்திரதுரை தெரிவித்துள்ளார்.

முன்பு 114 புள்ளிகள் பெற்றதாக அறிவிக்கப்பட்ட கே.லக்ஷ்மன் என்ற மாணவனுக்கு 118 புள்ளிகளும், முன்பு 114 புள்ளிகள் கிடைத்ததாகக் கூறப்பட்ட ஆர்.லக்ஷ்மன் என்ற மாணவனுக்கு 120 புள்ளிகளும் கிடைத்துள்ளன. இதனால் மத்திய கல்லூரியில் இருந்து இப்பரீட்சையில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது. (ஓ-10)

## யாழ்நகரில் பிரபல்யமான வர்த்தக நிறுவனத்துக்கு விற்பனையாளர் தேவை

புத்தகம், பாடசாலை உபகரணம், அலுவலக உபகரணம் ஆகியவற்றுக்கு விற்பனையாளர்கள் -

நெல்குற்றும் இயந்திர வகை உதிரி இலத்திரனியல் பொருள்கள் ஆகியவற்றில் கைதேர்ந்த ஆங்கில அறிவுள்ள விற்பனையாளர்கள் - தேவை.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். முன் அனுபவம் உடையோருக்கு முதன்மை இடம். நேரில் வரவும்.

**ஆல் சிலோன் டிஸ்ரிப்பியூட்டேர்ஸ்,**
**212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**
*T.P.No.: 021-222 5542.*

(C/26490)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 - 03 - 1975 | 16 - 01 - 2003 |

அமரர்
**மகாதேவன் நிர்மலதாஸ்**
*(நிமல் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)*

இன்று (15.02.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஆக் லேன்,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

- குடும்பத்தினர்.

(14450)

## ஓராண்டு நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18 - 04 - 1954 | 15 - 02 - 2002 |

சுன்னாகம் - கொக்குவில்
**திருமதி ஜெயசோதி அற்புதலிங்கம்**
அவர்கள்

*காயாமல் நனையாமல் காத்துமே வளர்த்துத்*
*தாயாகி நின்ற தவக்கொழுந்தே!*
*ஓயாமல் உங்களை ஒருங்கே நினைந்துருகி*
*வாயாரக் கூப்பிட வைத்தனையே அம்மா!*

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கொக்குவில்.*

- குடும்பத்தினர்.

(14472)

# பெண்போராளிகள் மீதான தாக்குதல் மிக மோசமான யுத்தநிறுத்த மீறல்

## அரசியல்துறை காட்டமான அறிக்கை

கிளிநொச்சி,பெப்.15

மானிப்பாயில் எமது பெண் போராளிகள்மீது அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட அநாகரிகமானதும் மிலேச்சத்தனமானதுமான தாக்குதல், மிகமோசமான யுத்தநிறுத்த மீறலாகும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை தெரிவித்துள்ளது.

மானிப்பாய்ச் சம்பவம் தொடர்பாக அரசியல்துறை விடுத்துள்ள காட்டமான அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தநிறுத்த உடன்படிக்கையின பிரகாரம் நிராயுதபாணிகளாக யாழ். மாவட்டத்தில் அரசியல் பணிகளில் ஈடுபட்டு வந்த பெண் போராளிகள் கடந்த புதனன்று மானிப்பாய் பகுதியில் வைத்து அரச படைகளாலும், ஈ.பி.டி.பி.தேச விரோதிகளாலும் வன்மையாகத் தாக்கப்பட்டு இம்சைப் படுத்தப்பட்டுள்ளனர்.

காலை 9.30மணியளவில் யாழ். மானிப்பாய்ப் பகுதியில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த ஆனந்தி, தமிழ்தென்றல், எழில், கமலினி, தமிழினி, கலைமதி, வித்தியா, கோமகள் ஆகிய விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த 8 பெண் போராளிகள், தமது வழக்கமான அரசியல பணிகளை மேற்கொள்வதற்காக யாழ. மானிப்பாய் வீதியால், மானிப்பாய் சந்தியைக் கடந்து - உடுவில் புறமாக திரும்பிச் சென்றுகொண்டிருந்த வேளை-

மானிப்பாய் இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண் வேலியைப் பழுது பார்த்துக்கொண்டிருந்த இராணுவத்தினர், உள்ளேயிருந்து வீதி கடந்து வீதிக்கு ஓடிவந்த இராணுவத்தினரும் திடீரெனப் போராளிகளை இடைமறித்துத் தாக்கத் தொடங்கினர்.

பெண்போராளிகள் அணிந்திருந்த இடுப்புப்பட்டியைக் கழற்றித் தருமாறு கூறிக்கொண்டும், இன்னும் தகாத வார்த்தைகளைக் கூறியவாறும் -

கத்தி, பொல்லு, இரும்புக்கம்பி, இரும்புச் சங்கிலி, வயர், கயிறு என்பவற்றாலும் இராணுவச்சப்பாத்துக் கால்களாலும் படையினர் மேற்கொண்ட மிருகத்தனமான தாக்குதலில் அனைத்துப் போராளிகளுமே பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

ஒரு போராளியைச் சூழ பல இராணுவத்தினர் நின்று அழுத்திப் பிடிக்க ஏனையோர் தாக்கியதுடன் இடுப்புப் பட்டியையும் பலவந்தமாகக் கழற்றியுள்ளனர்.

இவ்வேளை - போராளிகள் தமது இடுப்புப்பட்டியைப் பாதுகாக்கும் பொருட்டு தமது இரு கைகளாலும் இடுப்புப்பட்டியைப் பற்றியவாறு இராணுவத்தினருடன் போராடியுள்ளனர். இராணுவத்தினர் போராளிகளை அடித்து தமது சப்பாத்துக் கால்களால் உதைத்துத் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த வேளையில், அவ்வீதி வழியே போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் இச்சம்பவத்தினைக் கண்டு போராளிகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அச்சமயம் அவர்களும் இராணுவத்தினரின் மோசமான தாக்குதலுக்குள்ளாகினர்.

இச்சம்பவத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட போராளிகள் சிகிச்சைகாகவும் மருத்துவ பரிசோதனைக் காகவும் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவச் சீருடையிலும் சாதாரண உடையிலுமாகவிருந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இத்தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களுடன் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலரும் இணைந்தே இத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் 12.30மணியளவில் 'பிக்கப்' வாகனத்திலும் ஒரு பஸ் வண்டியிலும், இராணுவ ட்ரக் வண்டியிலும் காங்கேசன்துறை வீதியால் மானிப்பாய் பகுதிக்கு வந்த கறுப்புத் துணியினால் முகமூடி அணிந்திருந்த 200க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மரக்கட்டைகளாலும், தடிகளாலும் அப்பகுதியில் நின்ற மக்களை கண் மூடித்தனமாகத் தாக்கினர்,

இத்திடீர்த் தாக்குதலைத் தொடர்ந்து நாலாபக்கமும் சிதறுண்டு ஓடிய மக்கள் சம்பவம் நடைபெற்ற இடத்தில் நின்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளிடம் முறையிட்டபோதும் அவர்களால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. இச்சம்பவத்தில் பல பொதுமக்கள் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச படைகளால் கடந்த புதனன்று மேற்கொள்ளப்பட்ட அநாகரிகமானதும் மிலேச்சத்தனமானதுமான செயல மிகமோசமான யுத்தநிறுத்த மீறலாகும்.

இதயசுத்தியோடு சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் புலிகளைச் சீண்டிவிடும் நோக்கத்தில் திட்டமிட்டே அரச படைகளால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற பல சம்பவங்கள் தொடர்பாக - இறுதியாக நடைபெற்ற பேர்ளின் பேச்சுகளின் போது புலிகளால் அரச பிரதி நிதிகளுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது, இவ்வாறான சம்பவங்கள் இனி நிகழாதென அரச தரப்புப் பிரதிநிதிகள் உறுதியளித்த பின்னரும் இச்சம்பவம் நடைபெற்றமை சமாதான நடவடிக்கையில் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இருந்த நம்பிக்கையைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

எமது போராளிகள் எத்துணை இடர்பாடுகள் வந்தபோதும் எமது தலைமையின் கட்டளையை ஏற்று புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பாதகம் ஏற்படாத வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடத்தை எட்டுகின்ற இந்த நிலையிலும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பல விடயங்கள் இலங்கை அரசினால் இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படாமலேயே உள்ளன.

நிறைவேற்றப்பட்ட விடயங்கள் கூட அவ்வப்போது ஒப்பந்த மீறல்களாகவும் புலிகளைச் சீண்டும் செயல்களாகவும் இருந்து வந்துள்ளதை கடந்தகால நிகழ்வுகள் சுட்டிநிற்கின்றன.

இனிவரும் காலங்களில் இவ்வாறான உடன்படிக்கை மீறல் சம்பவங்கள் தொடராவண்ணமிருக்க உறுதியான நிலைப்பாட்டை எடுக்குமாறும் இத்தாக்குதல் தொடர்பாக யுத்தநிறுத்த மீறல் புரிந்த படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

மானிப்பாயில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மீறல் சம்பவத்தை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். தொடரும் சமாதானச் சூழல் - ஆரோககியமானதாக அமைய அரச தரப்பும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டு மென கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

# மானிப்பாய் சம்பவம்; இராணுவ அத்துமீறல்

## மாவை எம்.பி. கண்டனம்

மானிப்பாய்ச் சம்பவம் ஓர் இராணுவ அத்துமீறல்; இது மக்கள் மத்தியில் மீண்டும் பயங்கரமான சூழ்நிலை ஒன்றைத் தோற்றுவித்திருக்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

விடுதலைப் புலிப போராளிகள் மற்றும் பொதுமக்கள் படையினரால் கண்டபடி தாக்கபபட்டுள்ளனர். இது பாரிய யுத்தநிறுத்த மீறலாகும். இதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். பொதுமக்களும் இந்தச் சம்பவம் குறித்து ஒன்றிணைந்து தமது எதிர்ப்பைக் காட்டவேண்டும்.

மேற்படி சம்பவம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து நான் விரிவாக எடுத்துக் கூறவுள்ளேன் - என்று மாவை எம்.பி. தெரிவித்தார். (எ)

# மினா நகர நெரிசலில் சிக்கி 20 ஹஜ் யாத்திரிகர்கள் மரணம்!

புனித ஹஜ் கடமையிலீடுபட்ட யாத்திரிகர் மத்தியில் கடந்த புதனன்று ஏற்பட்ட நெரிசலில் 20 யாத்திரிகர்கள் மரணமானார்கள். இவர்களில் ஆறு பேர் பெண்கள்.

புனித மக்கா நகரில் திரண்டிருக்கும் ஹஜ் யாத்திரிகள் மக்கா நகருக்கு வெளியேயுள்ள மினா எனுமிடத்தில் சாத்தானுக்கு கல்லெறியும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். லட்சக்கணக்கான மக்கள் இதில் பங்கேற்றனர். அப்பொழுது திடீர் என்று மக்கள் சமுத்திரத்தில் நெரிசல் ஏற்பட்டது. நெரிசலில் சிக்கியோரே மரணமானார்கள். இதில் 20 பேர் மரணமடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் பலர் காயமடைந்தனர்.

இறந்தவர்களில் மூவர் இந்தியர்கள், நால்வர் பாகிஸ்தானியர், இருவர் எகிபதியரும் தலா ஒருவர் ஈரானையும் ஏமனையும் சேர்ந்தவர்கள். ஏனையோர உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. 1998 ஆம் ஆண்டு நடந்த நெரிசலில் 118 பேர் மரணமானார்கள். 1994ஆம் ஆண்டு நெரிசலில் 270 பேர் இறந்தனர்.(எ)

### சாவகச்சேரியில் மிதிவெடி அகற்றும் பணியில் படையினர்

சாவகச்சேரி டச்சு வீதி - மருதடிப் பகுதியில படையினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கடந்த வாரம் தொடக்கம் கண்ணிவெடி, மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த புதனன்று இப்பகுதியில் காணப்பட்ட கண்ணிவெடி ஒன்று இப்பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது. 2000ஆம் ஆண்டு தொடக்கம் இப்பகுதியில் படையினரின் முன்னணிக் காவலரண்கள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

# விலை அதிகரிப்புகளுக்கு எதிராக 17ஆம் திகதி 'கூச்சல்' போராட்டம்

## நாடு முழுவதிலும் நடத்த எதிரணி திட்டம்

கொழும்பு,பெப்.15

பொருள்களின் விலை அதிகரிப்பு, விவசாயிகளுக்கான நிவாரணங்களில் வெட்டு, சமுர்த்தி கொடுப்பனவு குறைப்பு என்பவற்றைக் கண்டித்து கூச்சல் எழுப்பும் போராட்டமொன்றை எதிர்க்கட்சிகள் எதிர்வரும் 17ஆம் திகதி நடத்தவிருக்கின்றன.

நாடு முழுவதிலும் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் இந்த இயக்கத்தில் பொதுமக்களை இணைந்து கொள்ளுமாறு அக்கட்சிகள் அழைப்பு விடுத்திருக்கின்றன.

இந்த இயக்கம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கிக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில்:-

மக்கள் கூச்சல் எழுப்பும் இந்த இயக்கம் ஓர் ஆர்ப்பாட்டமல்ல.

விலையேற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தமது எதிர்ப்பை தமது பிரதேசத்திலேயே காண்பிப்பார்கள். எதிர்வரும் 17ஆம் திகதி நண்பகல் 12.31 மணிக்கு தமக்கு வசதியான இடத்திலிருந்து கூச்சல் எழுப்பும் நிகழ்ச்சியில் மக்கள் இணைந்து கொள்ளலாம். தமது அலுவலகத்தில் அல்லது தொழில் செய்யும் இடத்திலிருப்போரும் தத்தமது இடத்திலிருந்தே இந்த எதிர்ப்பைக் காட்டலாம்.

இன்று மக்கள் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றனர். கட்டுப்படுத்த முடியாத காரணிகளினால் பொருள்களின் விலை அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில், அரசு தலையிட்டு அதனைக் கட்டுப்படுத்தவேண்டும். 'வற்' வரியைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்தல், மானியம் வழங்குதல் என்பன மூலம் அரசு விலைகளைக் குறைக்கலாம் - என்றார்.

பொ.ஐ.மு.நாடாளுமன்ற உறுப்பினர் பவித்திரா வன்னியாராச்சி கூறுகையில், விலை அதிகரிப்பால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே. எனவே, அனைத்து பெண்களும் இதில இணைந்து கொள்ளவேண்டும - என்றார். (ஐ)

# ரயில்வே திணைக்களம் ஆட்டம் காணுகிறது அடுத்த நடவடிக்கை குறித்து அரசு ஆராய்வு

## சேவைகளை நடத்த மாதம் 22 கோடி ரூபா தேவை

பெரும் நிதி நெருக்கடி ரயில்வே திணைக்களத்தை முடக்கும் நிலைக்கு உள்ளாக்கி வருகிறது. நிதி பற்றாக் குறையால் ஏற்கனவே ரயில் சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதோடு எதிர்காலத்தில் வேறு பல பிரச்சினைகளுக்கு திணைக்களம் உள்ளாகலாம என எதிர்பார்க்கப்படுகின்றது. சீரான ரயில் சேவையை நடத்த மாதமொன்றுக்கு சுமார் 22 கோடி ரூபா திணைக்களத்துக்குத் தேவைப்படுகின்றது. இந்த நிதியை எவ்வாறு பெறுவது என்பது குறித்து போக்குவரத்து அமைச்சு இப்பொழுது ஆராய்ந்து வருகிறது.

ரயில் சேவை எதிர்நோக்கும் நெருக்கடி குறித்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை விசேட கூட்டமொன்று நடைபெறவிருக்கின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, திறைசேரியின செயலாளர் சரித்த ரத்வத்த ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

பெரும் நஷ்டத்தில் இயங்கும் ரயில் சேவையை எவ்வாறு தொடர்ந்து நடத்துவது என்பது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படும். ரயில் கட்டணங்களை அதிகரிப்பது குறித்தும் ஆராயப்படவிருக்கின்றது.

ரயில் சேவைகளைத் தொடர்ந்து நடத்த அரசு தேவையான நிதியை வழங்கமுடியாவிடின் தனியார் துறையினரின் ஒத்துழைப்பு பெறப்படவேண்டும் என்று ரயில்வே திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு உறுப்பினருக்கு எதிராக பிரேரணை

கொழும்பு,பெப்.15

லஞ்சப் புகார்கள் விசாரணை ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினரான கிங்ஸ்லி விக்கிரமசூரியவை ஆணைக் குழுவிலிருந்து நீக்குமாறு கோரும் பிரேரணை ஒன்று சபாநாயகரிடம் கடந்த செவ்வாயன்று கையளிக்கப் பட்டது.

அமைச்சர்களான எஸ்.பி.திஸாநாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் உட்பட அரச எம்.பிக்கள் பலரும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலரும் இப்பிரேரணையில் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

ஆணைக்குழு சட்டத்தை மீறி இரகசியங்களை வெளியிட்டார் என்னும் குற்றச்சாட்டின்பேரில் அவரைப் பதவியிலிருந்து அகற்றுவது குறித்து ஆராய தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டுமென பிரேரணையில் கோரப்பட்டிருக்கிறது. (எ)

# மீண்டும் வன்னிக்குப் போய் ஆயுதங்களுடன் திரும்பிவரும் நிலை ஏற்பட்டுவிடக் கூடாது!

## புலிகள் தளபதி அமிர்தாப் தெரிவிப்பு

நல்லூர்,பெப்.15

குடாநாட்டில் நிராயுதபாணிகளாக இருக்கும் விடுதலைப் புலிகள் மீது யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் மூலம் சிறிலங்காப் படையினர் மேற்கொள்ளும் அடாவடித்தனங்களில் இருந்து அவர்களைத் தமிழீழ மக்கள் பாதுகாக்க வேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப்.

கடந்த புதனன்று கல்வியங்காடு வயல்வெளி கந்தசாமி கோயில் முன்றலில் இடம்பெற்ற வீதி நாடக நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

காஞ்சிரங்குடா, நெடுந்தீவு, மானிப்பாய் போன்ற இடங்களில் நடந்த இராணுவ அடாவடித்தனங்கள் எம்மை அவமானப்படுத்தி, ஆத்திரமூட்டி வேண்டுமென்றே வலிந்து சண்டைக்கு இழுக்கும் நடவடிக்கைகள் ஆகும். போர்நிறுத்த சமாதான சூழலில் எமது போராளிகளும், பொதுமக்களும் தாககப்படுவதும், கொல்லப்படுவதும் பாரதூரமான விடயங்களாகும். தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் பாதிப்படையக்கூடாது என்பதற்காகவே நாம் அமைதியைப் பேணி வருகின்றோம். ஆனால், இது போன்ற சம்பவங்கள் தொடருமானால் நிராயுதபாணிகளாகவிருக்கும் நாம் யாழ்குடாநாட்டை விட்டு வெளியேறி ஆயுதம் தாங்கிய படையணிகளாகவே மீண்டும் திரும்பி வரவேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் சிறிலங்கா அரசும் அதன் இராணுவமுமே ஏற்கவேண்டும்.

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடையும் நிலையிலும் எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பல இன்னமும் தீர்க்கப்படாதிருக்கின்றன. அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் எனும் போர்வையில் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரமுடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளனர். மாங்குளம், கிளிநொச்சி, ஆனையிறவு போன்ற இடங்களில் உச்சப் பாதுகாப்புக் கொண்ட அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் இருந்தன. அவை எல்லாம் எம்மால் தகர்த்தழிக்கப்பட்டன.

எமது மக்கள் தமக்குரிய உரிமைகளுடன் நிம்மதியாகவும், சுபீட்சமாகவும் வாழக்கூடிய ஒரு தீர்வினையே தற்போதைய சமாதானப் பேச்சுக்கள மூலம் நாம் எதிர்பார்க்கின்றோம். உரிய தீர்வுகள் வழங்கப்படாவிட்டால அவற்றைப் போராடிப் பெறவேண்டிய இராணுவ பலம் எம்மிடம் உள்ளது என்பதை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

இலங்கை அரசு ஒருபுறம் சமாதானப் பேச்சுக்களை நடத்திக் கொண்டு மறுபுறம் நவீன இராணுவ சாதனங்களை கொள்வனவு செய்து தனது படைபலத்தைப் பெருக்கி வருகிறது. சமாதானப் பேச்சுக்களின் போது நாமும் இராணுவ ரீதியில் பலமான நிலையில் இருக்கவேண்டும் அப்போதுதான் எமது உரிமைகளை வலியுறுத்தி பெறமுடியும். ஆதலால் நாமும் எமது பலத்தை அதிகரிக்க வேண்டியநிலை ஏற்படுகிறது - என்று தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் புரட்சி கானங்கள், இசை நிகழ்ச்சியும் புதுவை அன்பனின் 'கரை தேடும் ஓடங்கள்' வீதி நாடக நிகழ்வும் அங்கு இடம் பெற்றன. (ஐ-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பல இன கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மோட்டார்கள், மீன் தொட்டிக்குரிய அழகு சாதனப் பொருள்கள் மற்றும் Love Birds குருவிகள், கூடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு 55A, அரசடி வீதி, தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம். (14341)

நல்ல நிலையில் உள்ள Mitsubishi Delica L 300 (முழு ஆசனங்கள் 750Kg விற்பனைக்குண்டு. விலை 350,000/-, T.V.S. விலை 18,000/- Cham ஆகிய இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.783, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P 222-2841 (14507)

நல்ல நிலையிலுள்ள CG 125 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.85, செம்மணி றோட், நல்லூர். (14490)

நிறைகூடிய புறொயிலர், கல்பேடஸ் என்பன சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் மொத்த மாகவும் விற்பனை செய்யப்படும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். தொடர்பு: 21/61, இராமநாதன் வீதி, கலட்டி கிளை: முட்டாஸ் கடைச் சந்தி அருகில், ஸ்ரான்லி வீதி. (14504)

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, உங்களுக்குத் தேவையான நிறைகளில், நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (13977)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (14361)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima, Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 20-02-2003 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். இல.19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (14391)

### இறைச்சிக்கோழி தேவை

பேட்டுக் கோழிகள், சேவல் கோழிகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். தபாலசிங்கம் 19, முருகேசர் லேன் (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (14498)

### தவறிவிட்டது

M.சகாயமலர் என்பவருடைய தே.அ.அ.(இல585595276V), வி.அ.அ (மனைவி) மற்றும் சில தங்க நகைகள், ஒருதொகைப் பணம் என்பன கறுப்புநிற கைப்பையுடன் யாழ்ப்பாணத்திற்கும் நாவாந்துறைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுடன் N.M.பாலசந்திரன், இல.19 சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (14482)

### கார் விற்பனைக்கு

சகல ஆவணங்களுடன் நல்ல நிலையில் உள்ள 4ஸ்ரீ தொடர் இலக்கமுடைய ஒஸ்ரின் கேம்பிறிஜ் கார் (பரினா) விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P. 3529, 2867. (14477)

### ஆடுகள் விற்பனைக்கு

நல்ல இன ஜமுனாபாரி மறி ஆடுகள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு) 19முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (14392)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, வங்கியில் கௌரவ பதவியில் கடமையாற்றும், 38 வயதுடைய, செவ்வாய் தோஷமற்ற, 27 கிரகபாவம் உள்ள மணமகனுக்கு மெல்லிய தோற்றமுள்ள, பண்புள்ள, அழகிய, குடும்பப் பாங்கான மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு குடும்பவிவரங்களுடன் தொடர்பு: விளம்பர இல.1777, C/o உதயன். (14337)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 28 வயதுடைய, செவ்வாய்க் குற்றமற்ற, 28 கிரகபாவமுடைய, பட்டதாரி ஆசிரியருக்கு தகுந்த மணப்பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல.1776, C/o உதயன். (14338)

### திருமண சேவை

1970, அனுஷம், செவ்வாயற்ற, கிரக பாவம் கூடிய, பட்டதாரி, மணமகளுக்கு உத்தியோக/தனியார்துறை மணமகன் உள்ளூர்/வெளியூரில் தேவை. தொடர்பு: துரைவிமலா, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.(14442)

### வீடு வாடகைக்கு

யாழ்.நகருக்கு அண்மையில் நான்கு அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரசாங்க உத்தியோகத்தருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தனியறையாகவும் கொடுக்கப்படும். விளம்பர இல.1781, மே/பா உதயன். (14497)

### வகுப்புகள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து புதிய வகுப்புகள் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை நடைபெறுகின்றன. தொடர்பு: 5, அம்மன் வீதி (வைரவர் கோயில் முன்பாக), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (14397)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் பணிபுரியும், விசாகநட்சத்திரம், 1972இல பிறந்த, லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக் குறிப்பு, புகைப்படங்களுடன் நேரில் சமுகம் தரவும்.

ப.கிருஷ்ணமூர்த்தி
மூர்த்தி விளம்பர சேவை
தேவி அச்சகம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
போன் : 2789
(14500)

### தென்னங்கன்று விநியோகம்

தென்மராட்சி,பெப்.15

தென்மராட்சிப் பிரதேசத்தில் யுத்தத்தினால் அழிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு ஈடுசெய்யும் முகமாக மேற்கொள்ளப்படும் தென்னம்பிள்ளை மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் மேலும் ஆறு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு தென்னங்கன்றுகள் தென்னை அபிவிருத்திச் சபையினரால் நேற்று வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இத்திட்டத்திற்கென ஆயிரத்து எழுநூறு தென்னங்கன்றுகள் சபையின் அச்சுவேலி நாற்று மேடையிலிருந்து கொண்டுவரப்பட்டன.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி நகரம், நுணாவில் கிழக்கு, மண்டுவில், கல்வயல், நுணாவில் மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கே தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

தென்மராட்சியில் இதுவரை 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட தென்னங்கன்று கள் மீள் நடுகைக்காக தென்னை அபிவிருத்திச் சபையினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ-117)

### வெங்காயப் பூவுக்கு கிராக்கி அதிகரிப்பு!

வடமராட்சி,பெப்.15

யாழ்ப்பாணத்திலிருந்து சந்தைப் படுத்தலுக்காக வெங்காயப் பூ கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுவதால் அதன் விலையும், கிராக்கியும் உயர்ந்துள்ளன.

ஒரு கிலோ வெங்காயப் பூ 25 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்பட்டு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக வெங்காயப் பூ சந்தைப்படுத்துவதற்காக கொழும்பு எடுத்துச் செல்லப்படாமையினால் கால்நடைகளுக்கு தீனியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-173)

# தவறிவிட்டன

கந்தையா குலேந்திரன் ஆகிய எனது உணவுப் பங்கீட்டு அட்டை (இல.01277), உலர் உணவு அட்டை, குறிப்பேடு, வாகன கைமாற்றுப் புத்தகம், வாகன கொள்வனவு பற்றுச் சீட்டு ஆகிய ஆவணங்கள் தெல்லிப்பழைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

கந்தையா குலேந்திரன்,
ஐயனார் கோவிலடி, மல்லாகம் தெற்கு, மல்லாகம்.
(14486)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 21 - 06 - 1935



மறைவு 16 - 01 - 2003

## அமரர் கந்தையா துரைராஜா

(ஓய்வுபெற்ற கணக்காளர்)

ஆனதோ முப்பத்தொன்று அந்தோ நீர் எமைப் பிரிந்து
நீர் மறைந்து போனாலும் நினைவுகள் மறையவே மறையாது
என்றும் எங்கள் மனதில் நின்று நினைவில் நிழலாடும்.

உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச்செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தந்தி, கடிதம் மூலம் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் சகல விதத்திலும் எமக்கு உதவிய உற்றார், உறவினர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (15.02.2003) சனிக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகியவற்றில் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

72/9, பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(14494)

மனைவி,
தியாகராசா (அப்பையா)
குடும்பத்தினர்.


உ

# யாழ்.வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தான



# தேர்த்திருவிழா

அம்பிகை அடியார்களே!

இன்று (15.02.2003) சனிக்கிழமை வழிபடும் அடியார்களின் வல்வினை போக்கி நல்வரமருளி அருட்காட்சிதர சித்திரத் தேரிலே ஆரோகணித்து சிங்காரப் பவனி வருகின்றாள்.

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகியான அன்னை ஸ்ரீ காளிஅம்பாள் தேர்த்திருவிழா நிகழ்ச்சிகள்:

காலை 7.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை
காலை 9.00 மணிக்கு அம்பிகை தேரில் எழுந்தருளல்
நண்பகல் 12.00மணிக்கு பச்சை சாத்தி தேரிலிருந்து இறங்குதல் தொடர்ந்து நவசக்தி அர்ச்சனை நடைபெற்று, பிராயச்சித்த அபிஷேகமும் நிகழும்.

அம்பிகை அடியார்கள் அனைவரும் வந்து அம்பாளைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

காளியம்பாள் தேவஸ்தானம்,
கன்னாதிட்டி.

- தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்.

தேர்த்திருவிழா சிறப்புடன் நடைபெறப் பிரார்த்திப்போர்:

| | |
|---|---|
| நியூ பிரியங்கா நகைமாடம்<br>2G, ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். | சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்<br>212, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். |

| | | |
|---|---|---|
| நிதியா நகைமாடம்<br>99,கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். | நதியா நகைமாடம்<br>02, கஸ்தூரியார் வீதி, யாழ்.<br>(ஸ்ரான்லி வீதிச் சந்தி).<br>T.P.: 021 - 3479 | கவுசன் மொடன் ஜூவல்லறி<br>129, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். |

| | |
|---|---|
| சிவமகாலட்சுமி நகையகம்<br>176, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம் (ராஜா தியேட்டர் முன்). | அர்ச்சனா ஜுவலர்ஸ்<br>118, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். |

(C/26538)


# கண்ணீர்ப் பூக்கள்

தன்னலங் கருதாத அரிய சமூக சேவையாளர்
லயன் டாக்டர் S.S.அருளானந்தம் அவர்களதும்
மக்கள் வங்கி வடலைய உதவிப் பொது முகாமையாளர்
திரு.சி.இளம்பிறைநாதன் அவர்களதும் பாசமிகு தந்தையாரான

## சுந்தரம் சின்னத்தம்பி

அவர்கள் காலமானதையிட்டுத் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

- மியூ தொலைத் தொடர்பு நிலையம்,
284, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-273620

NATHAN INN
441, Galle Rd., Colombo-4.

(14508)

# கண்ணீர் அஞ்சலி

சிறந்த சமூக சேவையாளரும், சமாதான நீதிவானுமான
டாக்டர் S.S.அருளானந்தம் அவர்களதும்
மக்கள் வங்கி வடலைய உதவிப் பொது முகாமையாளர்
திரு.சி.இளம்பிறைநாதன் அவர்களதும் பாசமிகு தந்தையாரான

## சுந்தரம் சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

இந்திரன் ஜுவலர்ஸ்,
யாழ். ; சாவகச்சேரி.
(14505)

- இராசையா தெய்வேந்திரன்
குடும்பத்தினர்

# எனது கண்களைச் சாரத்தால் கட்டிவிட்டு கம்பிவேலிக்கு அப்பால் தூக்கி எறிந்தனர்

## மிருசுவில் படுகொலை வழக்கில் சாட்சியம்!

## 5 எதிரிகளை சாட்சி அடையாளம் காட்டினார்

எனது கண்களைச் சாரத்தால் கட்டிவிட்டு, கைகளை ஒருவரும் கால்களை இன்னொருவரும் பிடித்து வேலிக் கம்பிக்கு அப்பால் தூக்கி எறிந்தனர்.

- இவ்வாறு சாட்சியம் அளித்தார் மிருசுவில் படுகொலைகள் வழக்கின் முக்கிய சாட்சியான சின்னத்துரை மகேஸ்வரன்.

மேற்படி வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது சாட்சியை சிரேஷ்ட அரச சட்டத்தரணி சரத் ஜயமான குறுக்கு விசாரணை செய்தார்.

விவரம் வருமாறு:-

சரத் ஜெயமான: கண்கள் கட்டப்பட்ட நிலையில் அருகில் இருந்த வேலியை உமக்கு எப்படித் தெரிந்தது?

*சாட்சி*: என்னைத் தூக்கி வீசிய போது எனது கண்கள் கட்டப்பட்டிருந்த சாரம் முள்வேலியில் சிக்கிக் கிழிந்தது. அப்போது வேலியைத் தெரிந்துகொண்டேன்.

*சரத் ஜயமான*: உம்மைத் தூக்கி எப்படி எறிந்தார்கள்?

*சாட்சி*: ஒருவர் எனது கால்களையும் மற்றொருவர் என் கைகளையும் தூக்கி என்னை வேலிக்கப்பால் எறிந்தார்கள்.

*சரத் ஜயமான*: கொய்யா மரத்தடியிலிருந்து கூட்டிச் சென்றவர்கள் உம்மை எங்கே கொண்டு சென்றார்கள்?

*சாட்சி*: ஒரு கழிவறைப் பக்கம் கூட்டிச் சென்றார்கள்.

*சரத் ஜயமான*: கழிவறைப்பக்கம் சென்றபின் உம்மை என்ன செய்தார்கள்?

*சாட்சி*: என்னை அடித்தார்கள்.

*சரத்ஜெயமான*: அடித்தவர்களை நீர் பார்த்தீரா?

*சாட்சி*: இல்லை.

*நீதிபதி இமாம்*: ஏன் பார்க்கவில்லை?

*சாட்சி*: அவர்கள் அடித்தவுடன் நான் கீழே விழுந்தேன். அடித்தவர்கள் இருவர் என்பது தெரியும். ஆனால், அவர்களின் முகங்களைப் பார்க்கவில்லை.

*சரத் ஜயமான*: உம்மை அடித்தவர்கள் எவ்வளவு நேரம் அடித்தார்கள்?

*சாட்சி*: 10 நிமிடம் அடித்தார்கள்.

*சரத் ஜயமான*: கழிவறைப் பக்கம் உம்மைக் கொண்டுசென்றபின் உம்மை நிறுத்திவிட்டு என்ன செய்தார்கள்?

*சாட்சி*: என்னைக் கூட்டிச் சென்ற இருவரில் ஒருவர் சென்று மேலும் நான்கு பேரைக் கூட்டிவந்தார்.

*சரத் ஜயமான*: நால்வரைக் கூட்டி வந்தவரின் அங்க அடையாளம் பற்றிக் கூறமுடியுமா?

*சாட்சி*: அவரது ஒரு கண் சிறியதாக இருக்கும். மறுகண் வழமை போன்றது.

சரத் ஜயமான: அவர் இந்த நீதிமன்றத்தில் இருக்கிறாரா?

(சாட்சி, குற்றவாளிக்கூண்டில் இருந்த 3ஆம் எதிரியை அடையாளம் காட்டினார். குறுக்கு விசாரணை மீண்டும் தொடர்ந்தது)

*சரத் ஜயமான*: உம்மிடம் கூட்டி வந்த நால்வரில் எவராவது ஒருவர் இந்த நீதி மன்றத்தில் இருக்கிறாரா? (ஏனைய நால்வரையும் சாட்சி அடையாளம் காட்டினார்.)

இதே தருணத்தில் எதிரிகள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி அனில் சில்வா முறைப்பாடொன்றை நீதிபதிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

ஐந்து எதிரிகளில் 5ஆவது எதிரி கடந்த இரண்டு நாள்களாக சுகவீனமுற்றிருந்தார். ஆனால், இன்றுவரை வைத்திய சிகிச்சையளிக்க சிறைச்சாலை அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேசமயம், இன்று முழுவதும் எதிரிகள் ஐவருக்கும் எதுவித ஆகாரமும் அளிக்கப்படவில்லை. எதிரிகளும் மனிதர்கள்தான். ஆகவே, எதிரிகள் சார்பில் போதிய அக்கறை எடுக்கும்படி நீதிபதிகள், சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டும் - என்றார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், எதிரிகள் விடயத்தில் போதிய அக்கறை எடுக்கும்படி சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மீள் விசாரணை நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது. (எ)

# மூளைவளர்ச்சி குன்றியோருக்கு விசேட கல்வி வழங்க ஏற்பாடு

மண்டைதீவு,பெப்.15

தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் உள்ள கட்புல வலு, செவிப்புல வலு மற்றும் இயற்கையாகவே மூளை வளர்ச்சி திருப்திகரமாக அமையாத 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு விசேட கல்வி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட கல்வித் திட்டத்தில் அடங்கும் மாணவர்களுக்கு வேலணை சேர் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் வதிவிடத்துடன் கூடிய விசேட கல்வி வழங்கப்படவுள்ளது.

அத்தகைய மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகள், சம்பந்தப்பட்ட மாணவர்கள் பற்றிய விவரங்களைக் கூடிய விரைவில் தீவக கல்வி வலயத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ-88)

# மருதமுனையில் நடந்த கொலை: மகன் பொலீஸாரால் கைது!

## விளக்கமறியலில் வைக்கப்பட்டார்

மருதமுனை பெற்றோல் நிலைய உரிமையாளர் எஸ்.எல்.அப்துல் அஸீஸ் (வயது 60) கொலையில் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இக்கொலை தொடர்பாக அவருடைய மகன் ஒருவர் பொலீஸாரால் சந்தேகத்தின் பேரில் கடந்த புதன் கிழமை கைதுசெய்யப்பட்டார்.

அப்துல் அஸீஸ் ஹபீழ் (வயது 29) என்னும் திருமணமாகாத அந்த மகன கைதுசெய்யப்பட்டு கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை நீதிபதி கே.தட்சணாமூர்த்தி விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 1.00மணிக்கு நடைபெற்ற இக்கொலை தொடர்பாக பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்பட்டு பதற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டது. ஆயினும் மகன் ஹபீழ் கைதுசெய்யப்பட்டதை அடுத்து ஊகங்கள் பொய்த்துவிட்டன.

கொலை செய்யப்பட்டவரின் மனைவி, மகள், மருமகள், பேரன் ஆகியோர் ஹஜ் கடமைக்காக புனித மக்கா சென்றுள்ளனர். (எ)

# புத்தளத்திலும் சகல வசதிகளுடன் புதிய தொழில்நுட்பக் கல்லூரி

புத்தளம்,பெப்.15

புத்தளம் நகரில் சகல வசதிகளும் கொண்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புத்தளம் தொகுதி ஐ.தே.கட்சி பிரதான அமைப்பாளர் எம்.ஐ.பி.ஹாபியின் இடைவிடாத முயற்சி காரணமாக மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் ஹாஷிம், கல்லூரி நிறுவுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

இக்கல்லூரியை அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வதில் தான் ஈடுபட்டுள்ளதாகவும், வெகுவிரைவில் புத்தளத்திற்கு விஜயஞ்செய்யவுள்ள அமைச்சர் கபீர் ஹாஷிம் கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைப்பாரெனவும் அமைப்பாளர் எம்.ஐ.பி.ஹாபி தெரிவித்தார். (எ)

## இளைஞர் படுகாயம்!

நுணாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் டொல்பின் வான் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார். மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரும், சாவகச்சேரியைச் சேர்ந்தவருமான சிவசுப்பிரமணியம் ததீசன் (வயது21) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

# தவறான மருந்துப் பாவனையால் குடாநாட்டில் மரணங்கள் அதிகரிப்பு

## மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் கூறுகிறார்

நோயாளர்களின் தவறான மருந்துப் பாவனையால் யாழ்.குடாநாட்டில் இன்று மரணங்கள் அதிகரித்துள்ளன.

மக்கள் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டால் இத்தகைய மரணங்களைக் கட்டுப்படுத்தமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் த.மகாதேவன்.

சங்கானைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உதவிப்பிரதேச செயலர் மு.சிவராசா தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது. உணவு மருந்துப் பரிசோதகர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் இன்று பல விதமான நோய்கள் பரவி வருகின்றன. இது வைத்தியசாலை வட்டாரத்தில் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. வேகமாக நெருப்புக் காய்ச்சல் பரவி வருகின்றது. இப்பிரதேசத்தில் மட்டும் 40பேருக்கு நெருப்புக் காய்ச்சல் பீடித்துள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் கொதித்து ஆறிய நீரையே பருகவேண்டும். வியாபார நிலையங்களில் சிற்றுண்டிகளையோ, உணவையோ சாப்பிடுவதைக் கூடியளவு தவிர்த்துக்கொள்ளல்வேண்டும். வியாபார நிலையங்களில் வேலை செய்பவர்கள் சுகாதாரத்தைப் பேணுவது எமக்குத் தெரியாது.

நோயாளர்கள் ஆயுர்வேத வைத்தியர்களிடமும், மருந்து விற்பனை நிலையங்களிலும் ஆங்கில மருந்துகளை வாங்கிப் பாவிப்பதை முற்றாக நிறுத்தவேண்டும். அதேவேளை, ஆயுள்வேத வைத்தியர்களும் நோயாளர்களுக்கு ஆங்கில மருந்துகளை வழங்குவதை நிறுத்த வேண்டும்.

இன்று எமது மக்கள் நோய் ஏற்பட்டதும் அருகிலிருக்கும் ஆயுள்வேத வைத்தியர்களிடம் செல்கின்றனர். அவர்களும் உடனடியாக குணமடையச் செய்வதற்கு அதிகூடிய மருந்துகளை வழங்குகின்றனர்.

இந்த அதிகூடிய மருந்துகளின் தாக்கம் பின்னர்தான் இவர்களுக்குத் தெரியும். அரசாங்க வைத்தியசாலைகளில் டாக்டர்கள் குறித்த நேரத்தில், குறிப்பிட்ட நாள்களுக்கு முதலில் சாதாரண மருந்துகளைக் கொடுத்து படிப்படியாக நோய் குணமடையாமல் இருந்தால் அதற்கேற்றவாறு மருந்துகளைக் கொடுக்கின்றனர்.

ஆனால், எமது மக்கள் வைத்தியசாலைகளுக்குச் சென்றால் உடனடியாக நோய் குணமடையாது என்று ஆயுள்வேத வைத்தியர்களிடம் சென்று கடுமையான மருந்துகளை வாங்கி உட்கொள்கின்றனர்.

பலதரப்பட்ட மருந்துகளை ஆயுளவேத வைத்தியர்கள், நோயாளர்களுக்குக் கொடுத்து சில நோயாளர்கள் நோய் குணமடையாமல் ஆபத்தான நிலைக்குவந்த பின்னர் வைத்தியசாலைக்கு வருகின்றனர்.

இதனால், இந்த நோயாளர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை வழங்கமுடியாமல் வைத்திய அதிகாரிகள் திண்டாடுகின்றனர்.

இந்த நோயாளர்களின் சரியான நோயையும் பரிசோதனைகளை மேற்கொண்டும் கண்டு பிடிக்கமுடியாமல் அவதிப்படுகின்றனர்.

எமது மக்களும் சில சில நோய்களுக்குரிய மருந்துகளை தெரிந்து வைத்திருக்கின்றனர். இதனால், தாமே தமக்கு வந்த நோய்களிற்கு மருந்துக் கடைகளுக்குச் சென்று குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட நாள்களுக்கு முழுமையான மருந்துகளைப் பாவிக்காமல் அரைகுறையாக மருந்துகளை வாங்கிப் பயன்படுத்துகின்றனர்.

இதனாலேயே, நோய் முழுமையாகக் குணமடையாமல் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மக்கள் விழிப்பாகவும் விழிப்புணர்ச்சியுடனும் இருப்பதன் மூலமே தவறான மருந்துப் பாவனையில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும். (எ-175)



தீவகக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய யாழ். வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ப.விக்னேஸ்வரன் மற்றும் தீவக வலயத்துக்கான புதிய கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபாலவாணிதாசன் ஆகியோருக்கு கல்வி வலய சமூகத்தினர் முறையே கைச்சங்கிலி, மாலை அணிவித்துக் கௌரவிப்பதைப் படங்களில் காணலாம். (எ)

## அடையாள அட்டை இல்லாதோருக்கு தனியான பட்டியல்

தேசிய அடையாள அட்டை இல்லாததால் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு பதிவு மேற்கொள்ளாத குடும்பங்களின் விவரங்களை தனியான பட்டியலில், முன்னுரிமை அடிப்படையில் தயாரித்து அனுப்பிவைக்குமாறு யாழ்.செயலக புனர்வாழ்வுப் பிரிவு திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, தென்மராட்சி பிரதேச செயலரைக் கேட்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டை இல்லாததற்கான உண்மைத் தன்மையை அந்தந்த கிராம அலுவலரால் உறுதிப்படுத்தி, பட்டியல் பொதுமக்களின் பார்வைக்கு விளம்பரப்படுத்தப்படல் வேண்டுமென்று அவர் அறிவித்துள்ளார். தேசிய அடையாள அட்டை இல்லாததால் மீளக் குடியமர்ந்த பல குடும்பங்களின் மீள்குடியமர்வுக் கொடுப்பனவுப் பதிவுகள் தென்மராட்சி பிரதேசத்தில் நிறுத்தப்பட்டிருந்தமை தெரிந்ததே. (எ-117)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.15

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் தங்கர் பச்சான் இயக்கிய 'சொல்ல மறந்த கதை' திரைப்படம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. (எ-ரி)

## மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பம்

அரியாலை,பெப்.15

கோப்பாய் தரவையில் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாக கூறப்படும் மிதிவெடிகளை அகற்றும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

'ஹலோ டிரஸ்ட்' நிறுவனத்தினால் மிதிவெடிகள் இருக்கும் இடங்களை இனங்காணும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.(எ-17)

### பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணை; விவாதம் அடுத்த வாரம்

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தை எதிர்வரும் 18ஆம் திகதி எடுத்துக்கொள்வதென சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியைத் தவிர ஏனைய கட்சிகள் பங்குபற்றின.

இதேவேளை, எதிர்வரும் 19ஆம் திகதி நிதியமைச்சர் கே.என். சொக்ஸியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏழு திருத்தச்சட்ட மூலங்களையும் விவாதத்திற்கு எடுப்பதென சபாநாயகர் தெரிவித்தார்.

வீடமைப்பு அபிவிருத்தி நிதி முகாமைத்துவ சட்ட மூலத்தின் மீதான விவாதத்தை எதிர்வரும் 20ஆம் திகதி விவாதத்திற்கு எடுப்பது எனவும், அன்றையதினம் மாலை நாக்கில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை தொடர்பாக விவாதம் ஒன்றை நடத்தவும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். 'இந்த விவாதம் நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளையில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# மீண்டுவந்தது...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)
டையை வெகு நெருக்கமாகக் கடந்து சென்றது. எனினும், அது மட்டையைத் தொடவோ உரசவோ இல்லை என்பது வீடியோ நாடாக்களில் தெளிவாகத் தெரிந்தது. தவறான தீர்ப்பால் ஆட்டமிழந்தபோது, ஆஸ்லே 70 பந்துகளில் 6 பௌண்டரிகளுடன் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். தொடர்ந்து ஹெய்ன்ஸும் 37 ஓட்டங்களுடன் ஹிண்ட்ஸால் மைதானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து வந்த வின்சென்டும் (9) ஹரிஸும் (19) சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஆனால், யாரும் எதிர்பாராமல் இறுதியில் வந்த மக்குலமும் அடம்ஸும் வெகு அழகாக அதிரடி ஆட்டம் ஒன்றை ஆடினார்கள். 24 பந்துகளில் ஒரு பௌண்டரி 2 சிக்ஸர்கள் உட்பட 35 ஓட்டங்களை விளாசினார் அடம்ஸ். தன் பங்குக்கு 53 பந்துகளில் ஒரு பௌண்டரி உட்பட 36 ஓட்டங்களைப் பெற்றார் மக்குலம். இறுதிவரை இருவரும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். 50 ஓவர்கள் முடிவில் 241 ஓட்டங்களைப் பெற்றது நியூஸிலாந்து.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தன் முதலாவது ஆட்டத்திலேயே 278 ஓட்டங்களைக் குவித்த மே.இந்தியர்களுக்கு இது ஒன்றும் பெரிய காரியமில்லை என்றுதான் கருதப்பட்டது. ஆனால், நியூஸிலாந்துப் பந்துவீச்சாளர் அடம்ஸ் மேற்கிந்தியர்களின் கனவைக் கலைத்தார். ஆரம்பம் முதலே ஓட்டங்களை குவிக்க மே.இந்தியர்கள் திணறினர். அதிரடி ஆட்டக்காரர்கள் கைல்லும் ஹிண்ட்ஸும் ஓட்டங்களைக் குவிக்க முயன்றனர். ஆனால் முடியவில்லை. 34 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட் சரிந்தது. 29 பந்துகளில் 5பௌண்டரிகளுடன் 22 ஓட்டங்களைக் குவித்த கைல் அடம்ஸின் பந்தில் பிளமிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவருக்காக வந்தவர் நட்சத்திரம் பிறையன் லாரா. தென்னாபிரிக்காவுக்கு எதிராக அழகான ஒரு சதத்தைக் குவித்து தன் திறமையை வெளிப்படுத்தியவர். ஆனால், இம்முறை விதி மே.இந்தியர்களுக்குச் சதிசெய்தது. 4 பந்துகளில் இரண்டே ஓட்டங்களைப் பெற்ற லாராவை அபாரமாக ரன்அவுட் செய்தனர் நியூஸிலாந்து வீரர்கள். எல்லைக் கோட்டை நோக்கி பந்தைச் செலுத்தி ஆடினார் லாரா. பந்து எல்லைக் கோட்டை எட்டவில்லை. அதற்குள் இரண்டு ஓட்டங்களைப் பெற்றுவிட்ட லாரா, மூன்றாவது ஓட்டத்துக்கு முயன்றார். ஆனால், பந்தைத் துரத்திச் சென்ற வின்சென்ட் விரைவாகப் பந்தை எடுத்து எறிந்தார். இடையில் நின்று பந்தைப் பெற்ற ஹெய்ன்ஸ் சடுதியாகத் திரும்பி முழு வேகத்தில் பந்தை எறிந்தார். நேரே பந்து விக்கெட்டைத் தாக்கி எகிற வைத்தது. தன் எல்லைக்கு மிக அருகே வந்து விட்ட போதும் லாரா அவுட். நியூஸிலாந்து வீரர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தம் வெற்றிக்கு முன் நின்ற பெரும் தடை அகன்ற சந்தோஷம் அவர்களுக்கு.

அடுத்து வந்த சந்தர்போலையும் (2) ஹூப்பரையும் (3) களத்தில் நிற்கவிடாமல் துரத்தியடித்தனர் ஓராமும் அடம்ஸும். 80 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து விழி பிதுங்க நின்றது மே.இந்தியா. கனவிலும் நினைத்திராத ஒரு சரிவு இது. யார் இதனை சரி செய்யப் போகின்றார்கள் என்பதே கேள்வி?

பின்னர் வந்தவர் சர்வான். அவருடன் இணையவந்தவர் பவல். தென்னாபிரிக்காவுடனான ஆட்டத்தின் இறுதியில் பந்துகளை விளாசு விளாசு என்று விளாசி ஓட்டங்களைக் குவித்தவர். ஆபத்தான வீரர். அன்றும் வந்தது முதல் தன் கைவரிசைகளில் ஒரு பௌண்டரி ஒரு சிக்ஸர் உட்பட 14 ஓட்டங்களை விளாசினார் அவா. விளாசி ஆடிக்கொண்டிருந்த அவரை பிடுங்கி எறிந்தார் ஓராம். இப்போது வெறும் 80 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்டுக்களை இழந்து என்னசெய்வது என்று தெரியாது பரிதவித்துக் கொண்டிருந்தது மே.இந்தியா. நியூஸிலாந்துக்கு முன்னால் இருந்த பெரும் தடைகள் பெரும்பாலும் அகன்றுவிட்டன. களத்தில் சர்வான் மட்டும் சற்று நின்றாடிக் கொண்டிருந்தார். இவரும் ஆபத்தானவர் தான். அவருடன் இணைந்தவர் விக்கெட் காப்பாளர் ஜேக்கப். அணியின் இக்கட்டு நிலை கண்டு அவர் பயப்படவில்லை. அதிரடியாக ஆடினார். ஓட்டங்கள் குவிந்தன. எண்ணிக்கை அதிகரித்தது. 7 ஆவது விக்கெட்டுக்காக அவர்கள் இருவரும் இணைந்து 98 ஓட்டங்களைக் குவித்தனர். எண்ணிக்கை 178 ஐத் தொட்டபோது நன்றாக - நம்பிக்கை தரும் விதத்தில் - ஆடிக் கொண்டிருந்த சர்வானின் விக்கெட்டை விற்றோரியின் பந்து தகர்த்து எறிந்தது. 99 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் 75 ஓட்டங்களைக் குவித்தார் சர்வான். சிறிது நேரத்திலேயே நன்றாக ஆடிக் கொண்டிருந்த ஜேக்கப்ஸும் ஆட்டமிழந்தார். அவர் 73 பந்துகளில் 3 பௌண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 50 ஓட்டங்களைக் குவித்தார். டைரிஸின் பந்தில் ஓராமிடம் பிடி கொடுத்து அவர் வெளியேறினார். தொடர்ந்து வந்த மக்லீன் ஓட்டங்களைப் பெற அவசரப்பட 'ரன் அவுட்' செய்யப்பட்டார். இறுதி ஆட்டக்காரர் டிலான் 6 பந்துகளில் 8 ஓட்டங்களை விளாசினார். அடம்ஸ் அவரது விக்கெட்டை மீண்டும் ஒரு தடவை பிடுங்கி எறிந்தார். டிராகஸ் மட்டும் 18 பந்துகளில் 16 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார். 49.4 ஓவர்களில் 221 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது மே.இந்தியா. 9.4 ஓவர்கள் வீசி ஒரு 'மெய்டினுடன்' 44 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தி மே.இந்தியாவின் வெற்றிக் கனவைத் தகர்த்த அடம்ஸ் அன்றைய ஆட்ட நாயகன்.

என்ன வாசகர்களே! மீண்டும் நாளை சந்திக்கலாம்?

- கனிமொழி.

## 'ஹற்றிக்'...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)
எதிராக ஓவல் மைதானத்தில் இரண்டாம் முறையாக இந்தச் சாதனையை நிகழ்த்தினார். இப்போது மூன்றாவதாக வாஸ்.

வாஸின் முதலாவது ஓவரின் நான்காவது பந்தில் சன்வர் ஹுசைன் ஒரு பௌண்டரியை விளாசி அணியின் எண்ணிக்கையை தொடங்கினார். ஆனால், அடுத்த பந்தில் அவர் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். முதல் ஓவரில் வெறும் 5 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களை இழந்தது பங்களாதேஷ்.

ஐந்தாவது ஓவரில் மீண்டும் அல் ஷகரியர் வாஸின் பந்தில் 'மிட் ஒவ்'இல் நின்ற அரவிந்தவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். முடிவில் 25 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார் வாஸ்.

(ம)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பிரான்பற்று J/147 பிரிவில் சேவையாற்றி, தற்போது மானிப்பாய் கிழக்கு J/138 பிரிவில் கடமையாற்றிவரும் கிராம அலுவலர்

**திரு.சி.பொ.யோகராசா**

அவர்கள் தரம் ஒன்றிற்கு பதவிஉயர்வு பெற்றுள்ளதையிட்டு அவரை நாம் மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பிரான்பற்று. (14520) - பிரான்பற்று மக்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நுணாவில் மத்தி J/307 கிராம உத்தியோகத்தர்

**திருமதி சந்திராதேவி சுந்தரலிங்கம்**

அவர்கள் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு மகிழ்வுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நுணாவில் மத்தி அன்பர்கள்.

நுணாவில். (14527)

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ் வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம்மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம்செய்து பாருங்கள்!

**மணிசாமி P.T.R.**

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.

இல. 54, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).

பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை.

(வியாழக்கிழமைகளில் விடுமுறை)

(14522)

வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

## பதவி வெற்றிடம்

*தொலைபேசி இயக்குநர்/ போட்டோப் பிரதி இயந்திர இயக்குநர்*

வயது : முப்பதிற்கு மேல்

பால் : இருபாலாரும்

தகைமை : சம்பந்தப்பட்ட துறைகளில் அனுபவமும் ஆங்கில அறிவும் உடையவராக இருக்கவேண்டும்.

28.02.2003 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சேவைச்சான்றிதழ், நற்சாட்சிப் பத்திரம், கல்வித்தகைமைப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நீர்வேலி. (C/26543) - பதில் பொதுமுகாமையாளர்.

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

### யுவதிகளுக்கான களப்பயிற்சி

Christian Aid உடன் இணைந்து நடத்தும் பெண்களுக்கான களப் பயிற்சி நடைபெறவுள்ளது. பங்குபற்ற விரும்புபவர்கள் 16.02.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னர் தமது பதிவினை மேற்கொள்ளலாம்.

நிகழ்த்துபவர் : திருமதி சாந்தி சச்சிதானந்தம் *(CA)*

இடம் : T.R.R.O. கேட்போர்கூடம்.

காலம் : 16.02.2003 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் 4.30 மணிவரை.

விடயம் : பெண்கள் மேம்பாடு தொடர்பானது.

தொடர்புகளுக்கு: **அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,** இல.108, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(C/26542)

## மீள்குடியமர்வு - புனரமைப்பு பற்றிய கலந்துரையாடல்

**பலாலி புனித செபஸதயார் ஆலய பரிபாலிப்பு புனரமைப்பு, பங்கு மக்களின் மீள்குடியமர்வு, புனரமைப்புப் பற்றிய கலந்துரையாடலும் சில முக்கிய தீர்மானங்களை எடுத்தலுக்குமாகிய ஒன்றுகூடல் 16.02.2003 (ஞாயிறு தினம்) பி.ப. 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது. எனவே பங்குமக்களை இதில் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை வழங்கி,. ஒத்துழைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேற்படி கூட்டம் " ஜெறோ மண்டபம்", 4ஆம் குறுக்குத் தெரு, அடைக்கல அன்னை ஆலயம் என்ற முகவரியில் இடம்பெறும்.**

தகவல்:
பங்குமக்கள்,
பலாலி புனித செபஸ்தியார் ஆலயம்.

(14530)

## கண்ணீர் அஞ்சலி

**மாரீசன் கூடல், சுப்பிரமணிய வித்தியாலய தரம் 01 மாணவனும், எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும், பட்டினிக்கு எதிரான நிறுவன திட்ட இணைப்பாளருமான க.ரவீந்திராவின அன்பு மகனும், ர.துரந்திரனின (தரம் - 03 மாணவன், மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம்) அன்புச் சகோதரருமான**

**செல்வன ர.சுவந்திரன்** அவர்கள்

**14.02.2003 அன்று அகாலமரணமடைந்ததையிட்டு பெருந்துயரமடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவர்களின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலை
அபவிருத்திச் சங்கத்தினர்,
யா/கலட்பராசிரி முன்பள்ளி
ஆசிரியர், மாணவர்கள்.

*மாரீசன் கூடல்,*
*சுப்பிரமணிய வித்தியாசாலை,*
*இளவாலை.* (சி-26547)

## துயர் பகிர்வு

**எமது வாணிபத்தின் சகபணியாளரான மு.வசந்தகுமார் அவர்களின் அன்புத் தந்தை**

**அமரர் வ.முருகேசு**

**அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவர் பிரிவால் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், நாங்களும் இத்துயரில் பங்கெடுத்துக் கொள்கின்றோம்.**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

பணியாளர்கள்,
சேரன் வாணிபம்.

(14527)


## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா சின்னம்மா

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சின்னம்மா 13.02.2003 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையாகிவிட்டார்.

அன்னார் கந்தசாமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற அரியமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுரஞ்சிதமலர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் ஆகியோரின் மாமியாரும் சுகதீபன் (பிரான்ஸ்), திருமகள் (பிரான்ஸ்), கலைமகள் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் கா.செல்லத்துரை (உடுவில்), கா.சின்னத்துரை (உடுவில்), வ.சின்னத்தம்பி (அளவெட்டி), காலஞ்சென்றவர்களான வ.கணபதி (காந்தி), வ.செல்லையா (அளவெட்டி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மலை வேம்படி,*
*அளவெட்டி மேற்கு.* (14523)

தகவல்:
செல்லத்துரை (மைத்துனர்)

### கார்த்திகேசு *(இரத்தினம்)* இராசாத்தி *(லலி)*

தச்சன் தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு இராசாத்தி (லலி) நேற்று (14.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்திகேசு (இரத்தினம்) அவர்களின் அன்பு மனைவியும் நாகமணி - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் ரஜனி, ரமேஸ் (மாணவன், யாழ். மத்திய கல்லூரி), ராதிகா (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி), ரஜிதா (மாணவி, நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை), மதுரா ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசதுரை, தியாகராசா, முருகையா, தவமணி, காலஞ்சென்ற நாகபூசணிஅம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சந்திரமதி, சாந்தசரோஜினி, கனகம்மா, தெய்வேந்திரம் (வவுனியா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் (நீர்வேலி) நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி, சீனியாக்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி வடக்கு.*
*நீர்வேலி.* (14524)

தகவல்:
கார்த்திகேசு (கணவர்).

### சின்னையா முருகேசு

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா முருகேசு (Rrd. R.M.P) அவர்கள் நேற்று (14.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் சாந்தினி (N.D.B ), நந்தினி (World Link Teleservices) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீதரா (H.N.B. Securities) அவர்களின் அன்பு மாமனாரும் பிரதீபன், கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இன்று (15.02.2003) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கனத்தை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, 4 மணிக்கு தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*3 1/2 HARISCHANDRA MAWATHA,*
*PAMANKADAI,*
*COLOMBO - 06.* (C/26541)

தகவல்:
திரு. சி.சபாரத்தினம்
(சகோதரர்).

# அரசு வரிவிலக்கு வழங்காவிடின் ஷெல் காஸ் விலையும் அதிகரிக்கும்

கொழும்பு,பெப்.15

ஷெல் காஸ் நிறுவனம் காஸ் விலையை திங்கள் முதல் அதிகரிக்கவுள்ளது. அரசு 'வற்' வரியிலிருந்து விலக்கு அளிக்குமேயானால் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்று அந்நிறுவனம்கூறுகின்றது.

நிறுவன தலைவர் நேபேர்ட்டொ மோறான் இது குறித்து தெரிவிக்கையில் " உலகச்சந்தை விலை உயர்வுக்கு ஏற்ப அடுத்த சில தினங்களில் காஸ் விலையை அதிகரிக்க இருக்கின்றோம். 15 ஆம் திகதி இன்று இது குறித்து கோலாலம்பூரில் உள்ள எமது பிராந்திய அலுவலகத்துடன் பேச்சு நடத்தவிருக்கின்றோம். இதனை அடுத்து விலை அதிகரிப்பு குறித்து அறிவிப்போம்" என்றார்.

அரசாங்கம் 'வற்' வரிவிலக்கு அளிக்க இருப்பதாக தெரிய வருகின்றது. ஆனாலும். இது குறித்து நிதி அமைச்சு எமக்கு இதுவரை எந்த அறிவித்தலையும் வழங்கவில்லை எனவும் அவர் சொன்னார். (ஒ)

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

காரைநகர் மணிவாசகர் சபையின் அறுபத்து மூன்றாவது ஆண்டுப பொதுக் கூட்டம் 16.02.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் சபைத் தலைவர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும். சைவ அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

து.நாகேந்திரன்
செயலாளர்.

(14532)

## 'Selection of School Furniture Suppliers'

GTZ - International Services Asia, on behalf of the donor agency, the EU, gives hereby notice for pre - selecting

**School Furniture Suppliers for the 'Rehabilitation of Schools in Jaffna'**

At the moment the GTZ - International Services Asia is rehabilitating about 55 Schools within the Jaffna District. For these Schools the supply of the following furniture is required:

- Student table and chairs, Type A, B and C (allover approx . 4000 sets)
- Teacher's table and chairs (approx . 100 sets)
- Wooden partition screens (approx . 100 units)
- Wooden black boards (approx. 40 units)

If it's not feasible for a supplier to provide the complete number of furniture, the supply contract could be broken down in appropriate shares. The Furniture will have to be supplied to the locations given by the GTZ - International services Asia distributed in all five educational zones. Under the pre-condition of the Donor, a very short time frame is given. Detailed **'Project Informations'** are available from the **'Project office'** at 521/11 Point Pedro Road, Nallur, Jaffna. Reputed and experienced **'Furniture Suppliers'** with professional key - management, with substantial financial capacity, with a good and adequate skilled and unskilled labour force on hand, with the ability to produce and deliver fast, are herewith invited to register with the GTZ - IS at the given office address. Latest registration date shall be one week from date of publication.

**Project Manager**
**GTZ - International Services Asia.**

## பாடசாலை தளபாடங்கள் நிரம்பல் செய்வோர் தெரிவு

**ஆசியாவின் GTZ சர்வதேச சேவைகள், E.U. நன்கொடை நிறுவனம் சார்பாக**

யாழ்ப்பாண பாடசாலைகளின் புனரமைப்பு செய்வதற்காக பாடசாலை தளபாடங்கள் நிரம்பல் செய்வதற்காக பாடசாலை தளபாடங்கள் நிரம்பல் செய்வோரின் முன் தெரிவிற்காக இந்த அறிவித்தலைத் தருகின்றது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் GTZ ஆசிய சர்வதேச சபைகள் சுமார் 55 பாடசாலைகளை புனரமைப்புச் செய்து வருகின்றது. இப்பாடசாலைகளுக்கு பின்வரும் தளபாடங்கள் தேவைப்படுகின்றன.

1. மாணவர் மேசைகள், கதிரைகள் தரம் A,B,C (சுமார் 4000 சோடிகளுக்கு மேல்)
2. ஆசிரியர் மேசைகள், கதிரைகள் (சுமார் 100 சோடிகள்)
3. மர மறைப்புகள் (சுமார் 100 அலகுகள்)
4. மர கரும்பலகைகள் (சுமார் 40 அலகுகள்)

நிரம்பல் செய்பவர் ஒருவரினால் தளபாட தேவையைப் பூரணமாகச் செயற்படுத்தமுடியாத இடத்து நிரம்பல் ஒப்பந்தம் தகுந்த முறையில் பிரிக்கப்பட்டு பகுதிகளாக்கப்படலாம். இம்மாவட்டத்தின் 5 கல்வ வலயங்களில் எம்மால் குறிப்பிடப்படும் இடங்களுக்கு தளபாடங்கள் கொடுக்கப்படல் வேண்டும். நன்கொடையாளரின் முன் நிபந்தனையின்கீழ் குறுகிய கால அவகாசம் வழங்கப்படும்.

"திட்ட தகவல்கள்" பெறும் இடம்:
திட்ட அலுவலகம்,
இல.521/11, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிரபலம் வாய்ந்த, அனுபவம் நிறைந்த தொழில் முகாமைத்துவம், போதிய நிதி வசதி, போதுமான அளவு பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத கூலி ஆள்கள் வசம் உள்ளவர்கள் திறமையாக உற்பத்தி செய்து வேகமாக விநியோகிக்கத்தக்க தளபாட நிரம்பல் செய்வோர் மேலே தரப்பட்ட அலுவலக முகவரியில் GTZ - IS இல் இந்த விளம்பரம் பிரசுரமாகிய தினத்திலிருந்து ஏழு நாள்களுக்குள் பதிவு செய்ய வேண்டும்.

திட்ட முகாமையாளர்
GTZ சர்வதேச சபைகள் - ஆசியா.

(C/26537)

## விளையாட்டு நிகழ்வுகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் அல்வாய நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இ.குகதாஸ் தலைமையில் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நாளை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (எ-10)

☆ ☆ ☆

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. (எ-10-86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,பெப்.15

உரும்பிராய் இந்துக் கல்லூரி வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் (எ-ரி)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,பெப்.15

சுழிபுரம் காட்டுப்புலம் அ.த.க.பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பி.ப. 2.15க்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் எஸ்.செல்லையா கலந்து கொள்வார். (எ-3)

## தேவை

றொட்டி போடத் தெரிந்தவர் தேவை.

**சண் கபே**
664., K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

(14531)

## தனித்துவமான அச்சிடல் தயாரிப்பு சேவைகள்

பாடசாலை மாணவர்களுக்கான கழுத்துப் பட்டிகள், இலச்சினைகள் மற்றும் கவர்ச்சிகரமான சுவரொட்டிகள், பதாகைகள் என்பவற்றை உங்கள் எண்ணம்போல் அச்சிடவும் தயாரிக்கவும் நாடவேண்டிய மிகச்சிறந்த நிறுவனம்

**வலம்புரி பிறிண்டிங் இன்டஸ்றீஸ்**
இல.19, சம்பியன் லேன்,
கொக்குவில். (14535)

## நிறஞ்சனாஸ் சங்கானை

மாதவன், மீராஜஸ்மின் நடித்த
**ரன்**
காட்நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே.)
THE MUMMY RETURNS

## நாகம்ஸ் சுன்னாகம்

ஜப்பானிய மெல்லலையில் கராட்டி மற்றும் துப்பாக்கிச் சண்டைகள் நிறைந்த படம்
**TOMB RAIDER**
காட்சிகள் தினமும்: 11.00, 3.00, 6.30 (பி.நே.)
17 ஆம் திகதி முதல்
"ரன்"

## ராஜா யாழ்ப்பாணம்

5 ஆவது வாரமாக...
**ஏப்ரல் மாதத்தில்**
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30

## அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் விற்பனை

மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளையில் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை அடகு வைத்து இதுவரையும் மீட்கப்படாத நகைகள் இன்று காலை 9.30 மணிக்கு வங்கியின் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய முகாமையாளர் எம்.கே.சிவபாதவிருதயர் அறிவித்துள்ளார்.

## நல்லை ஆதீனத்தில் சமயப்பேருரையும் இசை நிகழ்வும்

இன்று மாலை 4.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸின் சிறப்புரையும் கலைஞர் குணராஜா நக்கீரனின் புல்லாங்குழல் இசையும் இடம்பெறவிருக்கின்றன. (3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நிறுவனத்தில் ஆரம்ப காலம் தொடக்கம் போஷகராக இருந்து அன்றுதொட்டு இன்றுவரை பல உதவிகளைச் செய்தும் பல உபகரணங்களை எமக்காக பெற்றுத் தருபவருமான

**திரு. க.சண்முகநாதனை**

எமது நிறுவனத்தின் அங்கத்தவர்கள் மற்றும் பிரமுகர்களும் அவர் இச்சேவையைத் தொடர்ந்து செய்து எமக்கு என்றும் உதவியாய் இருக்கவேண்டுமென்றும், அவர் என்றும் நலமுடன் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கின்றோம்.

**செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம்,**
**விளையாட்டுக் கழக நண்பர்கள்**
**(ம.சந்திரன், கெ.பிரகாஸ்)**

விளம்பர உதவி:-
**கங்கா போட்டோ அன் பென்சி**
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி. (14528)

## மரண அறிவித்தல்கள்

### ரவீந்திரா சுவந்திரன் (குட்டி)

*(மாரிசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலை தரம் - 1 மாணவன்)*

மாரிசன்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் சுவந்திரன் அவர்கள் நேற்று (14.02.2003) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் ரவீந்திரா (Action Faim - ACF) - சுசீலாதேவி தம்பதியினரின் அன்பு மகனும் துரந்திரன், தபேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கந்தையா (T.R.R.O.), சாவித்திரி, நடராசா, மரகதவல்லி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாரிசன் கூடல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

*மாரிசன்கூடல்,*
*இளவாலை.*
(14536)
தகவல்:
க.ரவீந்திரா (தந்தை)

### கணபதி சரவனை செல்லையா

காரைநகர், விக்காவில் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவனை செல்லையா அவர்கள் நேற்று (14.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் துரைராசா (போதனாசிரியர், தொழிநுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்), புஷ்பராணி, யோகராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆச்சி முத்து, செல்லாச்சி, ஐயாத்துரை ஆகியோரின் சகோதரனும் சின்னத்தம்பி ஆண்டியையா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2003) சனிக்கிழமை மதியம் 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகாமி அம்பாள் வீதி,*
*காரைநகர்.*
(சி-26554)
தகவல்:
செல்லையா துரைராசா
(மகன்).

### கதிரேசு வேலாயுதபிள்ளை

கோண்டாவில், குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு வேலாயுதபிள்ளை நேற்று (14.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் திரவியம், பரமேஸ்வரி (கனடா), கந்தையா (கனடா), காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.02.2003) சனிக்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரது மருமகளான கோபாலமூர்த்தி தவமணி தேவியின் (பிள்ளை) இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'குமரகோட்டம்',*
*கோண்டாவில்.*
(14533)
தகவல்:
கோபாலமூர்த்தி தவமணிதேவி (மருமகள்),
மு.ராசன் (பேரன்).

### நாகலிங்கம் தர்மையா (குணம்)-காரைநகர்

*(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், புகையிரதத் திணைக்களம்)*

காரைநகர், சிதம்பராமூர்த்தி கேணியடியைச் சேர்ந்த நாகலிங்கம் தர்மையா (குணம்) நேற்று (14.02.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் மனோரஞ்சிதம் (ஹொலண்ட்), ரவிச்சந்திரன் (லண்டன்), தேவரஞ்சன் ஆகியோரின் அன்புத் தகப்பனும் சிவானந்தனின் (ஹொலண்ட்) அன்பு மாமனாரும் பிரியாவின் அன்புப் பேரனும் சந்திரசேகரம், சபாரத்தினம், சர்மா, கிருபாஸ் (வட்டக்கச்சி), பாக்கியம், இராசம்மா, நாகரத்தினம், பத்மாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சி.தில்லைநாதனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிதம்பராமூர்த்தி கேணியடி,*
*காரைநகர்.*
(14534)
தகவல்:
த.தேவரஞ்சன் (மகன்).

## அம்பாறை திருக்கோவில் பகுதியில்

# பொதுமக்களின் கடும் எதிர்ப்பால் முகாம் அமைக்கும் முயற்சி தோல்வி!

காரைதீவு,பெப்.15

திருக்கோவில் விஷேட அதிரடிப் படை முகாமை அதே பகுதியில் வேறு ஓர் இடத்தில் அமைக்கப் படையினர் எடுத்த முயற்சி பொதுமக்களின் எதிர்ப்பால் கைகூடவில்லை.

காரைதீவு விஷேட அதிரடிப்படை உதவி பொலீஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன, யுத்த நிறுத்த கண்காணிப் புக்குழுவின் அம்பாறை மாவட்டத் தலைவர் கார்ல் உட்பட அம்பாறை செயலக நில அளவைத் திணைக்கள அதிகரிகள். முகாம் அமையவிருக்கும பகுதிச் சென்றபோது மக்களின் ஆர்ப பாட்டம் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட எம்.பி அரிய நாயகம் சந்திரநேருவின் தொடர்ச்சியான கோரிக்கையின் பேரில் திருக்கோவில் அதிரடிப்படை முகாம் அகற்றப்படவிருக்கிறது. வைத்தியசாலையின் ஒரு பகுதியில் இம்முகாம் இருப்பதால் வைத்தியசாலையின் ஒரு பகுதியில் இம்முகாம் இருப்பதால் வைத்தியசாலை மற்றும் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி நேரு எம்.பி. சுட்டிக்காட்டியிருந்தார். படை முகாம் அமையவிருக்கும் புதிய இடத்தை நில அளவை செய்ய குழுவினர்நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு அந்த இடத்துக்குச்சென்றனர்.

முதலில் இக்குழுவினர் காஞ்சிரங்குடா சம்பவத்தில் படுகொலையுண்ட ஏழு தமிழ் இளைஞர்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் முகாம் அமைக்க அளவு வேலைகளை மேற்கொள்ள ஆயத்தமானார்கள். அப்பொழுது 300இற்கும் மேற்பட்ட இளைஞர்கள், பொதுமக்கள் திரண்டு வந்து "இது தனியார் காணி படை முகாம் அமைக்கவேண்டாம்" என்று கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## World Cup Score card - 2003

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்



சிங்கர்

புதிய பார்வை

இல. 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:021-222 5408

நாணயச் சுழற்சி: இலங்கை

ஆட்டநாயகன்: சமிந்த வாஸ் முடிவு: 10விக்கெட்டுக்களால் இலங்கை வெற்றி

**பங்களாதேஷ்**

துடுப்பாட்டம்

| | | | | |
|---|---|---|---|---|
| எச்.சர்கார் | | b/வாஸ் | .... | 00 |
| எஸ்.ஸஹாரியர் | c/டி.சில்வா | b/வாஸ் | .... | 10 |
| எம்.அஷ்ரஃபுல் | | c& b/வாஸ் | ... | 00 |
| எஹ்சானுல் ஹக் | c/ஜெவர்த்தன | b/வாஸ் | .... | 00 |
| எஸ்.ஹுஸைன் | lbw | வாஸ் | .... | 04 |
| ஏ.கபாலி | c/ஜெயசூரிய | b/பெர்னாண்டோ | .... | 32 |
| கே.மசூர் | lbw | b/முரளி | .... | 21 |
| எம்.ரஃபீக் | c/சங்ககார | b/முரளி | .... | 06 |
| ரி.பைஸ்யா | c/ ஆர்னோல்ட் | b/முரளி | .... | 05 |
| எம்.மொர்டுஷா | c/முரளி | b/வாஸ் | .... | 28 |
| எம்.இஸ்லாம் | not out | | .... | 03 |
| *உதிரிகள்* | | | .... | 15 |
| மொத்தம் | (31.1 ஓவர்கள்) | | .... | 124/10 |

பந்துவீச்சு

வாஸ்: 9.1-2-25-6, நிஸங்க: 5-0-23-0, பெர்னாண்டோ: 7-0-47-1, முரளி: 10-4-25-3

**இலங்கை**

துடுப்பாட்டம்

| | | | |
|---|---|---|---|
| எம்.எஸ்.அத்தப்பத்து | not out | .... | 69 |
| சனத் ஜயசூரிய | not out | .... | 55 |
| *உதிரிகள்* | | .... | 02 |
| மொத்தம் | (21.1 ஓவர்கள்) | .... | 126/0 |

*களம் இறங்காதோர்:* எச்.பி.திலகரட்ன, எம். ஜயவர்த்தன, ஏ.டி.சில்வா கே.சங்ககார, பி.ஆர்னோல்ட், சி.வாஸ், எம். முரளிதரன், டி.பெர்னாண்டோ, டபிள்யு.குணரட்ண

பந்துவீச்சு

இஸ்லாம்: 6-1-22-0, மொர்டுஷா: 5-0-39-0, பைஸ்யா: 3-0-19-0, ரஃபீக்: 4.1-1-22-0, ஹுஸைன்: 2-0-14-0, கபாலி: 1-0-9-0

**இன்றைய ஆட்டங்கள் - பெப். 15**

| | | | | |
|---|---|---|---|---|
| கென்யா | Vs | கனடா | கேப்டவுண் | 1.30p.m. |
| ஆஸ்திரேலியா | Vs | இந்தியா | செஞ்சூரியன் | 2.00p.m. |

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 07 - 1932



மறைவு 28 - 02 - 2002

### திருமதி சிங்கரத்தினம் அசலாம்பிகை

அன்போடும் பண்போடும் ஆதரவாய் எமை அரவணைத்து
பொறுமையின் இருப்பிடமாகத் திகழ்ந்த அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் மறையவே மறையாது
ஓராண்டு கடந்தாலும் அன்னையே நீங்கள் எங்களோடு வாழ்கின்றீர்கள்!

எமது அன்னையின் நினைவாக எதிர்வரும் 18.02.2003 செவ்வாய்க்கிழமை எங்களுடைய இல்லத்தில் நிகழவிருக்கின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.*

அன்புக் கணவர்,பிள்ளைகள், மருமக்கள்

(13818)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பின்னர் அச்சபை தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என்றும் -

சபைகளின் பதவிக்காலம் நாளை மறுதினம் நீடிக்கப்படாவிட்டால் யாழ். நகரசபையும் செயலிழந்ததாகவே கருதப்படும் என்றும் -

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அலுவலக மட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் சொன்னார். (ஒ-3)

## தீ விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துக்கான காரணம் தெரியவில்லை எனப்பொலீஸார் கூறினர். எனினும், இரசாயனப்பகுப்பாய்வுக்காக அங்கு வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்கள் வெடித்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்தத் தீ அனர்த்தத்தினால் உயிர் இழப்பு ஏதும் ஏற்படவில்லை. என்றாலும், திணைக்களத்தில் இருநத பொருள்களுக்கு பலத்தசேதம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பாணந்துறையிலிருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று கோட்டை கலதாரி ஹோட்டலுக்கு அருகில் தீப்பிடித்து எரிந்தது. தீயணைப்புப் படையினர் தீயை அணைத்தனர். தீ பிடித்ததற்கான காரணம் உடனடியாக அறியப்படவில்லை.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 25 பிள்ளைகள் பலியான சம்பவத்தை அவர் மறந்துவிட்டது கவலைக்குரியதாகும்" என்றார். பேச்சுக்களில் கலந்துகொண்ட தமிழ்ச்செல்வன், கருணா, புலித்தேவன் ஆகியோர் நேற்றுமுன்தினம் காலை விமானப் படையின் இரண்டு ஹெலிகொப்டர்களில் கட்டுநாயக்காவிலிருந்து பயணமானார்கள்.

## மானிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படும் என்றும் - அவர் மேலும் சொன்னார்.

மானிப்பாய் சம்பவம் குறித்து விசாரணை நடத்த இராணுவத் தலைமையக அதிகாரி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்தன தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது. (ஒ-3)

**CHEMISTRY CENTRE**
பலாலி வீதி, கந்தர்மடம்.
"காந்தப்புலம்"
Sat., Sun. 6.30 - 7.30 a.m.
ஆரம்பம் : 15.02.2003
By: கருணாநிதி
(1709)

## இளவாலை மாரீசன்கூடல் வீதியில்

# ட்ராக்டர் சக்கரத்தில் சிக்கி 5வயதுச் சிறுவன் உயிரிழப்பு!

இளவாலை,பெப்.15

இளவாலை மாரீசன்கூடல் வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தொன்றில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

சைக்கிளில் தனது சகோதரனுடன சென்று கொண்டிருந்த சிறுவன் சைக்கிள் தடுமாறிய போது கீழே வீழ்ந்தான் என்றும் - அப்போது வீதியால் வந்து கொண்டிருந்த உழவு இயந்திரத்தின் இரு சில்லுக்குள் சிக்குண்டான் என்றும் - கூறப்படுகிறது.

சிறுவனின் நெஞ்சுப் பகுதி மீது உழவு இயந்திரம் ஏறியது. இதனால படுகாயமடைந்த சிறுவனை சைக்கிளில தூக்கிவைத்து சங்கானை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல அவரது சகோதரர் முயன்றார். எனினும் வழியில் சிறுவன் உயிரிழந்தான் என்று கூறப்படுகிறது.

மாரீசன்கூடல் கலப்பராகிரி முன் பள்ளியின தரம் 1 மாணவனான ர.சுவந்திரன (வயது 5) என்ற சிறுவனே இந்த விபத்தில் உயிரிழந்தவனாவான்.

இச்சம்பவம் தொடர்பாக இளவாலை பொலீஸார் விசாரணை நடத்துகின்றனர்.

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக சடலம் இன்று யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்படும்.

இந்தச்சம்பவம் தொடர்பாக டிராக்டர் சாரதியான அருளப்பு அலோசியஸ் நேற்றிரவு மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் இல்லத்தில அவர் முன்பாக இளவாலைப் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டார். இவரை விளக்கமறியலில் வைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-3-48)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொழில்நுட்பக் கல்லூரி மாணவ மாணவிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பேரணியில் கலந்துகொண்டனர்.

ஆரியகுளம் சந்தியில் பேரணி சென்றடைந்த போது அங்கு ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த யாழ். தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினதும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும் கொடும்பாவிகள் எரிக்கபபட்டன.

அச்சமயம் ஆர்ப்பாட்டக்காரர்கள் வானதிரக் கோஷங்களை எழுப்பினர்.

தளபதி சரத் பொன்சேகாவையும் ஈ.பி.டி.பியினரையும் கடுமையாகச் சாடும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் -

★ குடா நாட்டில் இருந்து ராணுவமே வெளியேறு!

★ எமது பெண் போராளிகளை நிராயுத பாணிகளாக சீண்டாதே

★ ஈ.பி.டி.பி. தேச விரோதக் கும்பலே உனக்கு குடாநாட்டில் இடமில்லை என்று கோஷமெழுப்பினர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

ஆயுதப் படையினர் வடக்கு - கிழக்கில் தங்கியிருக்கும் வரை தமிழ் மக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணமே இருக்கும் என்பதையும் சமாதானப் பேச்சுக்களைத் தொடர முடியாத நிலையே ஏற்படும் என்பதையும் கண்காணிப்புக் குழுவிடம் கையளித்த மகஜரில் யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

*(ஐ-8-9-15-17-30-31-74-135)*
*(மகஜரின் முழு விவரம் 2ஆம் பக்கத்தில்)*

## 14 மாநக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாளர் மாநாட்டில் 13ஆம் திகதியிடப்பட்ட ராஜினாமாக் கடிதங்களை அனைத்து உறுப்பினர்களும் மறுநாள் (நேற்று) மாநகராட்சி ஆணையாளரிடம் கையளிக்கப்போவதாகவும் செய்தியாளர் மாநாட்டில் மேயர் தெரிவித்திருந்தார். ஆனால், நேற்று அலுவலக நேரம் முடியும் முன்னர் மேயர் உட்பட 14 பேரே தமது ராஜினாமாக் கடிதங்களைக் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ராஜினாமாக் கடிதங்களைக் கையளித்தவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு :-

செல்லன் கந்தையன் (கூட்டணி), ச.அரவிந்தன் (கூட்டணி), செ.விஜயரட்ணம் (கூட்டணி), ம.கருணாநிதி (கூட்டணி), தங்கமுகுந்தன் (கூட்டணி), க.சத்தியானந்தசிவம் (கூட்டணி)-

செ.இருதயராஜன் (புளொட்), முதவநாதன் (புளொட்), க.விக்கினேஸ்வரன் (புளொட்), ஜே.எம்.பஷீர் (புளொட்), எஸ்.எச்.மாஹிர் (புளொட்) -

த.சுபத்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எவ். - வரதர் அணி), மனுவல் மங்களநேசன் (ஈ.பி.ஆர்.எல்.எவ். - வரதர்அணி), கிங்ஸ்லிகணேசன் (ஈ.பி.டி.பி.).

நேற்று தம்மிடம் கையளிக்கப்பட்ட ராஜினாமாக் கடிதங்களை யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் கையளிக்கவுள்ளதாக மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, சி.இரத்தினசபாபதி (கூட்டணி), சு.பரராஜசிங்கம் (கூட்டணி), ச.மருசலீன் (கூட்டணி), மோ.எட்வேட் (ஈ.பி.டி.பி.), து.இளங்கோ (ஈ.பி.டி.பி.), மா.கனகரத்தினம் (ஈ.பி.டி.பி.), கே.எம்.கமால்தீன் (ஈ.பி.டி.பி.), எம்.ஜேசுதாசன் (ஈ.பி.டி.பி.), ச.ஜெயச் சந்திரன் (புளொட்) ஆகியோர் நேற்றுத் தமது ராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பிக்கவில்லை. ஒ-3)

## முழு நிலாக் கருத்தரங்கு

பொருள்: உறவும் பிரிவும்: குடும்பத்தின் சமூகவியல்
வழங்குபவர்: கலாநிதி என். சண்முகலிங்கன் M.A. PH.D
தலைவர் அரசறிவியல் - சமூகவியல்துறை
இணைப்பாளர், பண்பாட்டியல் முதுகலைமாணி
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.
நாள்: 16.2.2003 நேரம் பி.ப. 3.30 (இ.நேரம்)
இடம்: "அகவொளி" குடும்ப வளத்துணை நிலையம், சென். பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்.

**இதில் பங்குபற்றி பயன்பெற வாரீர்!**

(14456) - இயக்குநர்.

## மரண அறிவித்தல்

### நடராசா மீகாநாதன்

காங்கேசன்துறை, காட்டடைப்பு வீதியைச் சொந்த இடமாகவும் கல்விளானை தற்போதைய முகவரியாகவும் கொண்ட நடராசாவின் மகன் மீகாநாதன் நேற்று (14.02.2003) மல்லாவியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - செல்வநாயகி தம்பதியினரின் மகனும் பாண்டியனார் (கன்னி நிலம் பதிப்பகம்), இளங்குமரன (பேபி - தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர்), யோகீஸ்வரி, விண்ணகச்செல்வி ஆகியோரின் உடன் பிறந்த சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வெ.இளங்குமரன்.
(தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர்)

(சி-26556)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.02.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அணு ஆயுதத்தை ஈராக்குக்கு எதிராக பயன்படுத்தவும் தயங்க மாட்டோம்!

## இப்படிக் கூறுகிறார் அமெ.பாதுகாப்பு அமைச்சர்



ஈராக்குடன் போர் மூண்டால் அணு ஆயுதத்தையும் தாம் பயன் படுத்தத் தயங்கப்போவதில்லை என்ற சாரப்பட அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையில் ஆயுதப் படைகளுக்கான குழுவின் முன் உரையாற்றியபோதே ரம்ஸ்பீல்ட் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

1947 ஆம் ஆண்டு இரண்டாவது உலகப் போரின்போது பயன்படுத்தப்பட்டதற்குப் பின்னர் இதுவரை பயன்படுத்தப்படாத ஆயுதங்களை ஈராக்குக்கு எதிராக பயன்படுத்தும் சாத்தியக்கூறுகளை புறந்தள்ள முடியாது. ஒவ்வொரு போரிலும் எப்படிப்பட்ட ஆயுதங்களை நாம் பயன்படுத்தப் போகிறோம் என்பதை முன்கூட்டியே தெரிவித்ததாக சரித்திரம் கிடையாது.

ஈராக்கிடம் இருக்கும் பேரழிவு ஆயுதங்களை அழிப்பதற்கும் நமது படைகளின் மீதோ நட்பு நாடுகள் மதோ தாக்குதல்கள் நடத்தப்பட்டால் அதற்குப் பதிலடியாகவும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் திட்டம் உள்ளது என்பதை ஏற்கனவே அதிபர் புஷ் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஈராக்குடனான போரில் மரபு ரீதியான போர் ஆயுதங்களை பயன்படுத்தவே அமெரிக்கா விரும்புகிறது. ஆனால் பேரழிவைத்தரும் சக்திவாய்ந்த ஆயுதங்களை எதிரி பயன்படுத்துவதற்கு முன்னர் அவற்றை அழிப்பதற்கு - தாக்கி நிர்மூலமாக்குவதற்கு - எந்த வகையான ஆயுதத்தையும் பயன்படுத்தும் உரிமையை அமெரிக்கா பெற்றுள்ளது. - என்றார் ரம்ஸ்பீல்ட்.

ஈராக்குக்கு எதிரான போரில் எந்தெந்த இலக்குகளை அணு ஆயுதம கொண்டு அழிக்கலாம் என்பது குறித்து அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் திட்டமிட்டு வருவதாக 'லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்' என்ற பத்திரிகை, தகவல் வெளியிட்டுள்ளது.

போரில் அமெரிக்கா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால உலகநாடுகளுடன் அது கொண்டுள்ள அனைத்து உறவுகளும் முறிவடைந்து விடும் என்று செனட் சபையின் ஜனநாயக் கட்சி உறுப்பினர் எட்வேட் கெனடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரதிநிதிகள் சபையில் அணு ஆயுதங்கள் பற்றி ரம்ஸ்பீல்ட் குறிப்பிட்டுள்ளதானது ஈராக்கில் - குறிப்பாக நிலத்துக்குக் கீழ் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் பேரழிவு தரும் ஆயுதங்களை அழிப்பதற்கு - அமெரிக்கா அணு ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு திட்டமிட்டுவிட்டது என்பதையே கோடி காட்டுகிறது என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ம)

# ஈராக்கை ஒடுக்காத ஐ.நா. வேண்டாம்!

## அதிபர் புஷ் சீற்றம்

"ஈராக் அதிபர் சதாம் ஹுசைனை எதிர்ப்பதில் உங்களுக்கு முதுகெலும்பிருப்பதைக் காட்டுங்கள். அவரை எதிர்த்து துணிச்சலுடன் நில்லுங்கள். பேரழிவு தரும் ஆயுதங்களை ஈராக்கிடமிருந்து அகற்ற ஐ.நா. தனது பொறுப்பை நிறைவேற்றவேண்டும. இல்லையேல் அது வரலாற்றிலிருந்து மறைந்து போகட்டும்."

- இவ்வாறு உணர்ச்சிகரமான உரை ஒன்றை ஆற்றியுள்ளார் அமெரிக்க அதிபர் புஷ். புளோரிடாவில் உள்ள கடற்படைத் தளத்தில் அவர் உரையாற்றினார். அப்போதே அவர் சீற்றத்துடன் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைதிக்கும் சுதந்திரத்துக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்தை எதிர்கொள்வதில் சுதந்திரநாடுகள் முதுகெலும்புடன் நடந்துகொள்ளும் என்று நம்புகிறேன். வெற்று விவாதம் நடத்தும் பயனற்ற அமைப்பாக ஐ.நா. சபை அழிந்தொழிந்துவிடாமல் சுதந்திர நாடுகள் செயற்படுமென எண்ணுகிறேன். பேரழிவு தரும் ஆயுதங்களை ஈராக் வைத்திருக்கக் கூடாது என்னும் ஐ.நா. தீர்மானத்தை செயற்



படுத்தும் திறன் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு இருக்கின்றதா என்பதை அது தெளிவுபடுத்தவேண்டும்.

ஐ.நா. நடவடிக்கை எடுக்கவல்லை எனில் ஈராக் வசம் இருந்து பேரழிவுதரும் ஆயுதங்களை அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் அகற்றும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் போர் கடைசி நடவடிக்கைதான். போர் தொடங்கப்பட்டால் ஈராக் வசம் இருந்து ஆயுதங்கள் களையப்படும் வரை அமெரிக்கப்படைகள் அங்கே தங்கியிருக்கும். - என்றார் புஷ். (ம)

# கொலம்பியா ஓட வீரர்களின் கடைசிப் பேச்சு வெளியீடு

ஹுஸ்டன்,பெப்.15

கொலம்பியா விண்வெளி ஓடம் வானில் வெடித்துச் சிதறும் முன்பாக, அதைக் கட்டுப்படுத்தும் பணியில் இருந்த பொறியியலாளர்களின் உரையாடல் அடங்கிய ஒலிநாடா செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

விபத்து நடைபெறுவதற்கு 30 நிமிடங்கள் முன்பாகக் கூட, கொலம்பியா ஓடத்தில் இருந்த விண்வெளி வீரர்களுக்கு எந்தவித ஆபத்தும் தெரியவில்லை. விபத்துக்கு 5 நிமிடங்களுக்கு முன்புதான் திடீரென, ஓடத்தின் கட்டுப்பாட்டு திரைகளில் இருந்து அனைத்து தகவல்களும் காணாமற்போயின.

இதுபற்றி விண்வெளி வீரர் ஜெ.'.ப் கிங், தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு தெரிவித்தார். ஏதாவது கெட்ட செய்தியை பதிலாகத் தரப்போகிறீர்களா என்றும் பதற்றத்துடன் அவர் கேட்டது ஒலிநாடாவில் பதிவாகியுள்ளது.

அடுத்தகணமே, கொலம்பியாவின் ஒரு பகுதி இறக்கை ஊசலாடுவதாக தரைக்கட்டுப்பாட்டில் இருந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அப்போதுதான் கொலம்பியா ஓடம் சுக்குநூறாக வெடித்த மிகப்பெரும் சோக நிகழ்ச்சி நடந்தது. (ம)

# ஈராக் மீதான தாக்குதலைத் தடுக்க பிரான்ஸ், ஜேர்மனி கடும் முயற்சி

நியூயோர்க்,பெப்.15

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலை எப்படியாவது தடுத்து நிறுத்தி விடுவதற்கு பிரான்ஸும் ஜேர்மனியும் கடுமையாக முயற்சி செய்து வருகின்றன. இவற்றுடன் ரஷ்யாவும் இணைந்து கொண்டுள்ளது.

ஈராக்கில் ஐ.நா. சோதனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து சோதனையை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்ற தமது கருத்தை இரு நாடுகளும் வலியுறுத்தி வருகின்றது. இது தொடர்பான தமது கருத்தை ஐ.நாவின் ஏனைய உறுப்பினர்களிடம் கொண்டுசெல்லும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதற்கான ஆதரவைப் பெறுவதிலும் அவர்கள் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றனர்.

ஈராக்கில் நாசகார ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிய உளவு விமானங்களைப் பயன்படுத்தலாம். அத்துடன் ஆயுத சோதனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்று பிரான்ஸ் தூதுவர் வில்பிபென் ஏற்கனவே தெரிவித்திருந்தார். இத்தகைய நடவடிக்கை மூலம் ஈராக் மீதான போரைத் தவிர்க்கமுடியும் என்று பிரான்ஸ் கருதுகின்றது.

இந்தக் கருத்தை பிரிட்டன் அடியோடு நிராகரித்து விட்டது. ஈராக்கில் ஆயுத சோதனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதால் எவ்விதப் பயனும் ஏற்படப்போவதில்லை என்று பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் ஜக் ஸ்ரோ தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது தாக்குதலை மேற்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை. அப்போதுதான் ஈராக்கிலுள்ள பேரழிவு தரும் ஆயுதங்களை அழிக்க முடியும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

இதேவேளை -

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் ஒரு கோடிக்கும் மேற்பட்ட ஈராக்கியர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே அவர்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்க ஐ.நா. தலைமைச் செயலர் கோபி அனான் பல்வேறு செயல்திட்டங்களை வகுத்து வருகின்றார்.

ஈராக் விடயம் குறித்து எதிர் வரும் 18ஆம் திகதி ரோம் நகரில் போப்பாண்டவரைச் சந்தித்துப் பேசுவதற்கும் அனான் திட்டமிட்டுள்ளார்.

# தற்கொலை தாக்குதல்களை அமெரிக்கா மீது நடத்துங்கள்!

## ஈராக்கியர்களுக்கு பின்லேடன் அறைகூவல்

லண்டன்,பெப்.15

ஈராக்மீது படையெடுக்கத் திட்டமிட்டுவரும் அமெரிக்கா மீது தற்கொலைத் தாக்குதலை நடத்துமாறு சர்வதேச பயங்கரவாத இயக்கமான அல்கெய்டா தலைவர் ஒஸாமா பின்லேடன் ஈராக்கிய மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுத்தால், அதற்கு ஆதரவு அளிக்கும் நாடுகள்மீதும் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அவரது உரை அடங்கிய ஒலிநாடாவை கடாரிலிருந்து செயல்பட்டு வரும் செயற்கைக்கோள் தொலைக்காட்சியான அல்ஜெஸீரா டி.வி., செவ்வாய்க்கிழமை இரவு ஒலிபரப்பியது.

அதில் பதிவாகி இருக்கும் குரல், பின்லேடனின் குரலைப்போல்தான் உள்ளது. ஏற்கனவே, பெறப்பட்ட வழியிலேயே பின்லேடனின் இந்த ஒலிநாடாவும் பெறப்பட்டுள்ளது. எனவே, அது அவரது குரல்தான் என்ற முடிவுக்கு வந்தோம் என்று அல்ஜஸீரா டி.வியின் ஒலிபரப்பு ஆசிரியர் யாசர் தாபெத் கூறினார்.

அதில் பின்லேடன் கூறியிருப்பதாவது:-



ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் கம்யூனிஸ்ட் கட்சி இருக்குமா, மறைந்து விடுமா என்பதைப் பற்றிக் கவலையில்லை. சோசலிசவாதிகளும் கடவுள் நம்பிக்கையற்றவர்கள்தான். ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து ஈராக் மக்கள் புனிதப் போரைத் தொடங்கவேண்டும்.

எதிரிக்கு எதிராகத் தற்கொலைத் தாக்குதலை நடத்தவேண்டும். அமெரிக்கர்களையும் இஸ்ரேலியர்களையும் அத்தாக்குதல்கள் இதுவரை இல்லாத வகையில் பீதிக்கு உள்ளாக்கிவிட்டது.

ஈராக்மீது படையெடுக்கும் அமெரிக்கரின் திட்டத்துக்கு, ஈராக்கின் அண்டை நாடுகளான முஸ்லிம் நாடுகளும் ஆதரவு அளிக்கக்கூடாது. அமெரிக்காவுடன் சேர்ந்து எந்த அரபு நாடாவது ஈராக்மீது தாக்குதல் நடத்தினாலோ, அமெரிக்கப் படைகளுக்கு இராணுவத் தள வசதியை அளித்தாலோ, நிர்வாக உதவிகளை வழங்கினாலோ அல்லது அமெரிக்கா இராணுவத் தாக்குதல்மூலம் ஈராக்கில் வாழும் முஸ்லிம் மக்களைக் கொன்று குவிப்பதற்கு எந்த நாடாவது வார்த்தை அளவில் ஆதரவு அளித்தால்கூட, அவையும் கடவுள் நம்பிக்கை அற்ற நாடுதான். அவையும் தற்கொலைத் தாக்குதலுக்கு உள்ளாகும்.

ஈராக்குக்கு எதிராக உளவியல் ரீதியான போரை நடத்துகிறது அமெரிக்கா. லேசர் குண்டுகள், ஸ்மார்ட் குண்டுகள் பற்றி அமெரிக்கா கூறும் பொய்களைக் கேட்டு ஈராக்மக்கள் கவலைப்படவேண்டாம். ஏனென்றால், வெளிப்படையாகத் தெரியும் இலக்குகளைத்தான் அக்குண்டுகளால் தாக்க முடியும். பதுங்கு குழிகளில் இருந்தால் அக்குண்டுகளால் ஒன்றும் செய்ய முடியாது.

பாகிஸ்தான், சவூதி அரேபியா, நைஜீரியா, யேமன் போன்ற அமெரிக்காவின் அடிமைகளாக இருக்கும் நாட்டு அரசுகளுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய மக்களைத் தூண்டுங்கள்.

- இவ்வாறு அந்த ஒலிநாடாவில் கூறியுள்ளார் பின்லேடன். (ம)

# எண்ணெய்க் கிணறுகளை தகர்க்க ஈராக் தயாராகிறது

நியூயோர்க்,பெப்.15

அமெரிக்கா தன் நாட்டின் மீது தாக்குதல் நடத்தினால் அதனிடம் சிக்கிக் கொள்ளக்கூடியவை எனக் கருதப்படும் எண்ணெய்க் கிணறுகளை தகர்த்துவிட ஈராக் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. இதற்காக எண்ணெய்க் கிணறுகள் அருகே பெருமளவு வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப் படுகின்றது.

அமெரிக்காவின் தாக்குதல் ஆரம்பித்த உடனேயே எண்ணெய்க் கிணறுகளை வெடிவைத்துத் தகர்த்து விட அதிபர் சதாம் ஹுசைன் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார். இத் தகவலை அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றே வெளியிட்டுள்ளது.

அந்த நிறுவனம் தெரிவித்துள்ள விவரம் வருமாறு:-

ஈராக்கில் ஆயிரத்து 500இற்கும் அதிகமான மசகு எண்ணெய் உற்பத்திக் கிணறுகள் உள்ளன. ஈராக் மீது போர் தொடுத்தால் முதலில் இவற்றில் சில கிணறுகளையாவது கைப்பற்ற அமெரிக்கா முயலும் என்று கருதப்படுகின்றது.

எனவே, கிணறுகளை அமெரிக்கா கைப்பற்றாமல் தடுப்பதற்காக அவற்றை வெடி வைத்துத் தகர்த்துவிட வேண்டும் என்பதே ஈராக்கின் திட்டமாகும்.

1991ஆம் ஆண்டு குவைத்தைக் கைப்பற்ற ஈராக் முயன்றது. இந்த மோதலில் குவைத்திலிருந்த 730 மசகு எண்ணெய்க் கிணறுகளை ஈராக் வெடிவைத்துத் தகர்த்தது. இதனால் குவைத்தின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அந்தக் கிணறுகளை மீண்டும் சீர்படுத்த 8 மாதங்கள் தேவைப்பட்டன. இதற்கு ஏற்பட்ட செலவு சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய். (ம)

## கண்ணீர் அஞ்சலி

உசன் ஐக்கிய நாணய சங்க அங்கத்தவரும்,
முன்னாள் செயலாளருமாகிய

**சரவணமுத்து சுப்பிரமணியம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உசன் ஐக்கிய நாணய சங்கம்,
உசன், மிருசுவில்.

(14496)

## முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு 27-02-1935 · மறைவு 27-02-2002

திருமதி
**அருமைத்துரை அன்னலட்சுமி**
(இராசாத்தி)

திதி: 16.02.2003

ஆண்டு ஒன்று மறைந்தாலும் உம் நினைவு மறையாது
ஈன்டு உம்மை நினைத்தே வாழுகின்றோம் நாம் இங்கு.

அன்னாரின் நினைவாக நாளை (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*சிங்கன் லேன்,*
*உடுவில்.*

(14495)

## குளத்தைப் புனரமைக்க கோரிக்கை

கைதடி,வடக்கு பூதராயர் ஆலயத்திற்கு அருகேயுள்ள குளத்தை விவசாயிகள் மற்றும் கால்நடைகளின் நன்மை கருதி புனரமைத்துத் தரும்படி கைதடி கிழக்கு விவசாய சம்மேளனத்தால் சாவகச்சேரி பிரதேச செயலருக்கும் யாழ்.மாவட்ட கமநல சேவை ஆணையாளருக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ம-75)

## கட்டட வசதி இன்றி அலையும் தபால் நிலையம்

கைதடி,பெப்.15

கைதடி தபாலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் இல்லாத குறை கடந்த பல ஆண்டுகளாக இருந்துவருகின்றது. இத்தபாலகம் 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகைக்கு இயங்கிவந்தது. 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த நடவடிக்கை காரணமாக இக்கட்டடம் முற்றாகச் சேதமடைந்தது. பின்னர் இத்தபாலகம் கோப்பாய் வீதியிலுள்ள பிறிதொரு தனியார் வீடு ஒன்றிலே இயங்கி வந்தது.

இவ்வாறு அலையும் இத்தபாலகத்திற்கு நிரந்தரக் காணியோ அன்றேல் கட்டடமோ இல்லாதது பெருங்குறை என்று அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, இத்தபாலகத்திற்கு ஒரு நிரந்தரக் கட்டடத்தை அமைக்க தபால் திணைக்களமும், யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (ம-75)

## JAFFNA MEDICAL ASSOCIATION

**Annual Sessions**
**February 20th - 22nd 2003**

**The Jaffna Medical Association Cordially invites**

All Doctors, Assistant Doctors, Dental Doctors and Students to the

Inauguration ceremony

to commence at 9.30 a.m. on 20.02.2003 at the Nurses Training School(Teaching Hospital, Jaffna)

and

V.T.Pasupathy Memorial lecture

to be held at 4.00 p.m. on 21.02.2003 **at the Veerasingam Hall, Jaffna.**

The V.T.Pasupathy lecture will be delivered by

**Dr.N.Sreeharan** MD. PhD. FRCP. FACP. FFPM

Senior Vice - President & European Medical Director
Glaxo Smith Kline Research & Development, Europe
(Former Professor of Medicine, Faculty of Medicine, University of Jaffna)

on

MOLECULES TO MEDICINE - PAST, PRESENT and FUTURE

The Memorial lecture will be followed by a Cultural Show

(C/26536)

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 08**

நாளை (16.02.2003) இடம்பெறவுள்ள தென்னாபிரிக்கா - நியூஸிலாந்து ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி வெற்றி பெறுமா?

முழுப்பெயர் : ......................................
முகவரி : ......................................
அ. அட்டை எண்: ......................................

இக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (16.02.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 08, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்



### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**Super Six பரிசுகள்**

இம்முறை சுப்பர் சிக்ஸ் பிரிவுக்குள் நுழையக்கூடிய அணிகள் எவை?

1. ........................ 2. ........................
3. ........................ 4. ........................
5. ........................ 6. ........................

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: பெப்ரவரி 28

முழுப்பெயர் : ......................................
முகவரி : ......................................
அ.அட்டை எண்: ......................................



முதற் பரிசு
மைக்கிறோ பிசி தரும்
கணனி

விசேட பரிசுகள்
அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டின்
கூப்பன்கள்

2ஆம் பரிசு
சிங்கர் நிறுவனம் தரும்
தொலைக்காட்சி



Super Six பரிசு
லுமாலா நிறுவனம் தரும்
சைக்கிள்கள்

ஆறுதல் பரிசுகள்
எக்ஸ்போ நிறுவனம் தரும்
விமான
ரிக்கெட்டுக்கள்

3ஆம் பரிசு
ஷார்ப் நிறுவனம் தரும்
வானொலி

தினம் தினம் ஒரு பரிசு
ஏசியன் நிறுவனம் தரும்
கழிவுக் கூப்பன்கள்

**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**Super Six பரிசுகள்:**
Super Six இற்கான சரியான அணிகளைத் தெரிவுசெய்யும் மூவருக்கு லுமாலா நிறுவனம் வழங்கும் புத்தம் புதிய சைக்கிள்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 28ஆகும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது? (........................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்? (........................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி: மார்ச் 15

முழுப்பெயர் : ......................................
முகவரி : ......................................
அ.அட்டை எண்: ......................................

# சமாதான விரோதிகளின் சதிச் செயலே பெண் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவம்

## பொது அமைப்புகள் பலவும் கடும் கண்டனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

மானிப்பாயில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள், படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்துப் பல பொது அமைப்புகளும் மாணவர் அமைப்புகளும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கைகள் வருமாறு:-

### யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

மானிப்பாயில் நிராயுதபாணிகளாகச் சென்ற எட்டுப் பெண் போராளிகள்மீது ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் இணைந்து மிருகத்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அதனைத் தடுக்க முற்பட்ட அப்பகுதிப் பொது மக்களும், வீதியால் சென்ற பொது மக்களும், செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்களும் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் ஒரு பெண் உரிமை மீறல் என்பதுடன் ஓர் அடிப்படை மனித உரிமை மீறலுமாகும்.

பத்திரிகையாளர் மீதான தாக்குதல் வடக்கு - கிழக்கில் கருத்துச் சுதந்திரத்திற்கெதிராக ஸ்ரீலங்கா அரசினால் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வரும் அச்சுறுத்தலாகும். இச்சம்பவம் புலிகளை வலிந்து யுத்தத்திற்குத் தள்ளும் நோக்கில் சமாதானத்தைக் குழப்பத் தொடர்ச்சியாக முயன்று வரும் ஜனாதிபதி சந்திரிகாவினதும் ஜெனரல் சரத் பொன்சேகாவினதும் கூட்டுச்சதி என்றே நாம் கருதுகின்றோம்.

வடக்கு - கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள தமிழர் தாயகப் பிரதேசத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி ஆயுதங்கள் இன்றி அரசியல் பணி புரிவதற்குப் புலிகளுக்கு உரிமை உண்டு என மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மட்டுமன்றி புரிந்துணர்வு உடன்படிக்கையினை புலிகள் தொடர்ச்சியாக மதித்தே வருகின்றார்கள். ஆனால், இராணுவம் தொடர்ச்சியாகப் புரிந்துணர்வு உடன்படிக்கையினை மீறியே வருகின்றது.

இச்சம்பவம் குடாநாட்டிலுள்ள அப்பாவிப் பொதுமக்கள் மத்தியில் பாதுகாப்பு தொடர்பான அச்சத்தினையும் பீதியினையும் ஏற்படுத்தியுள்ளது. பெண் உரிமை, பெண் அடக்குமுறை என்றெல்லாம் உலகிற்கு போதிக்கின்ற அரசும் சர்வதேச சமூகமும் இதுவிடயத்தில் என்ன செய்யப்போகின்றார்கள்? இவ்வாறான மிருகத்தனமான தாக்குதல்கள் தமது தாய்மார்கள் மீதும், சகோதரிகள் மீதும், சகோதரர்கள் மீதும் மேற்கொள்ளப்படுவதனை நேரில் பார்க்கின்றவர்களே புலிகள் இயக்கத்தில் இணைகின்றார்கள் என்பதனை இச்சந்தர்ப்பத்தில் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஈ.பி.டி.பியினரும், இராணுவத்தினரும், கடற்படையினரும் கடந்த ஒரு வருட காலத்தினுள் மேற்கொண்டு வரும் பல்வேறு மனித உரிமை மீறல்களையும், போர்நிறுத்த மீறல்களையும் தாங்கள் கண்டும் உரிய நடவடிக்கை எடுக்க தவறியே வந்துள்ளீர்கள். அண்மையில் நெடுந்தீவில் எமது பாதுகாவலர் மூவர் தற்கொலை செய்துகொள்வதற்கும் தங்களது பொறுப்பற்றதும் பக்கச்சார்பானதுமான நடவடிக்கைகளே காரணமாகும்.

இது விடயத்தில் தாங்கள் வெறுமனே பத்திரிகை அறிக்கைகளுடன் நின்றுவிடாது தாக்குதல் நடத்திய படையினர் தண்டிக்கப்படக்கூடிய வகையில் பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடைபெறுவதற்கும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதன்மூலம் தாக்கப்பட்ட பெண்களுக்கும் அப்பாவிப் பொது மக்களுக்கும் நீதி கிடைப்பதற்கும் தமிழர் கலாசார தலைநகரமான யாழ்ப்பாணத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கும் தாங்கள் ஆவன செய்ய வேண்டும் எனக் கோருகின்றோம்.

எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே. புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மதிப்பளித்து ஆயுதங்கள் இன்றி வந்துள்ள விடுதலைப் புலிகள் மீதான தாக்குதலையும் அதனைத் தடுக்கமுற்பட்ட மக்கள் மீதான தாக்குதலையும் ஓர் அந்நிய இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே கருதவேண்டியுள்ளது.

அத்துடன் இந்த ஆக்கிரமிப்பாளர்கள் எம் மண்ணில் தங்கியிருக்கும் வரை, சமாதானப் பேச்சுக்களைத் தொடர முடியாது என்பதனையும் நடைபெற்ற சம்பவங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. எனவே, குடாநாட்டில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தங்களைக் கோருகின்றோம்.

★ ★ ★

### வவுனியா உயர்தர மாணவர் ஒன்றியம்

மானிப்பாய் இராணுவ முகாம் முன்னே நிராயுதபாணிகளாகச் சென்று கொண்டிருந்த பெண் போராளிகள் எட்டுப்பேரைக் காயப்படுத்தி, அடாவடித்தனம் புரிந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஈனச்செயலானது ஒவ்வொரு தமிழனதும் தன்மானத்தைச் சீண்டுவதாக உள்ளது. இவர்களது இத்தகைய காட்டுமிராண்டித்தனமான செயலினை வவுனியா மாவட்ட உயர்தர தமிழ் மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஸ்ரீலங்கா இராணுவமே நீ சிந்தித்து செயற்படு. உன் சின்னத்தனமான செயலால் நீ சீரழியப் போகின்றாய். புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றால் புரியாத உனக்கு ஒப்பந்தத்தை மீறினால் தமிழ் மண்ணில் தீப்பந்தம் எரியும் என்பது திடம். நெடுந்தீவில் பட்ட புண் ஆறும்முன்னே சடுதியாக மற்றொரு தடவை வெந்த புண்ணில் வேலா? ஆயுதம் அற்ற நிலையில் உள்ள பெண் போராளிகளுடன் அடாவடித்தனம் புரிவதுதான் உன் - ஆண்மையின் இலக்கணமா?

★ ★ ★

### இந்துசமயப் பேரவை

எமது நாட்டில் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் போரால், பல பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளதுடன் மாபெரும் அழிவுகளும் இடம் பெற்றுள்ளன.

இச்சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள சமாதான முன்னெடுப்பு எமக்கு மன ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது. இதனைக் குலைக்கும் விதத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது. சமாதான வழிக்கு மக்களை ஆற்றுப்படுத்தும் பொறுப்புவாய்ந்த படையினர், அதனைக் குழப்பும்வகையில் செயற்படுவது பெரும் ஏமாற்றத்தையே அனைவருக்கும் ஏற்படுத்தியுள்ளது.

மானிப்பாயில் பெண்புலிகளின் பட்டிகளை அகற்ற முற்பட்டமை தனி மனித சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது. மேலும் பல பொதுமக்கள் இந்நிகழ்வில் தாக்கப்பட்டுள்ளனர். இந்த அநாகரிகமான செயலை மிகவன்மையாகக் கண்டிப்பதுடன், இத்தகைய நிகழ்வுகள் தொடராதிருக்கச் சம்பந்தப்பட்டவர்கள் உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தொடரும் அமைதியான சூழ்நிலை குழம்புமேயானால் அனாவசியமாக இந்துக்களும், பௌத்தர்களும் அழியவேண்டி ஏற்படும். இதனைத் தடுக்க பௌத்த பீடங்கள் துணிந்து முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

★ ★ ★

### யாழ்.மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனம்

அரை நூற்றாண்டுக்கு மேலாக நடைபெற்றுவந்த போர் ஓய்ந்து இப்போதுதான் மக்கள் இயல்பான வாழ்க்கையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இச்சமாதான சூழலைக் குழப்பும் வகையில் யார் செயற்பட்டாலும் அது யுத்தநிறுத்த மீறலே ஆகும். பெண் போராளிகளும் மக்களும் தாக்கப்பட்ட சம்பவமானது யுத்தநிறுத்த மீறலும் மனித உரிமை மீறலும் ஆகும். 8 விடுதலைப் புலிப் பெண் போராளிகளும் தமது இடுப்புப் பட்டியை கறுப்பு நிறத்தில் அணிந்திருந்த ஒரே காரணத்துக்காக நடை முகாமோ, விசாரணை முகாமோ அல்லாத ஒரு முகாமுக்கு முன்பாக நடு வீதியில் வைத்து எந்தவித கேள்விகளும் இன்றி திடீரெனப் பாய்ந்த இராணுவக் காடையர்களும், E.P.D.P. தேச விரோதக் கும்பலும் இணைந்து சட்டத்தைத் தாமாகவே கையில் எடுத்துக் கொண்டு பெண் போராளிகளது இடுப்புப் பட்டிகளை வலிந்து அகற்ற முயன்றுள்ளனர்.

காட்டுமிராண்டித்தனமான கட்டளையை ஏற்கமறுத்து, இராணுவ உபகரணமல்லாத சாதாரண கறுப்புத் துணியை மட்டுமே உடையதான தம் இடுப்புப் பட்டியை அகற்ற போராளிகள் மறுத்துள்ளனர். ஆனால், சமாதானத்தை விரும்பாத இராணுவத்தினர் கத்தி, குண்டாந்தடி, சைக்கிள் செயின், வயர், போன்ற வன்முறை மிகுந்த ஆயுதங்களால் மிகவும் கொடூரமான முறையில மனிதாபிமானமற்ற, நாகரிகமில்லாத, காட்டுமிராண்டித்தனமான முறையில் 8 பெண் போராளிகளையும் சூழ்ந்து நின்று தாக்கியுள்ளனர்.

தாக்குதலை எதிர்த்து மக்கள் குரல்கொடுத்தவேளை - இராணுவத் தாக்குதலிற்காக குவிப்பது போன்று - நிராயுத பாணிகளாக நின்ற மக்கள் முன்பு ஆயுதந் தாங்கிய இராணுவத்தினர் முகமூடிகள் சகிதம் கொண்டு வரப்பட்டு பொதுமக்கள் பெருங்காயங்களுக்கு உள்ளாகும் அளவிற்கு தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாது சமாதானம் பற்றிய எவ்வித பொறுப்புமற்றவர்களாக இராணுவத்தினர் நடந்துகொண்டமை இராணுவத்தினரும் அவர்களுக்கு தலைமை தாங்குபவர்களும் வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும். இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இவ்வன்முறையினை நாம கடுமையாகக் கண்டிக்கின்றோம்.

இத்தாக்குதலானது நிரந்தர சமாதானம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். மீண்டும் மக்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கவேண்டும். சாவும் அவலமும், ஓப்பாரியும் ஓலமுமாக எமது மக்கள் மீண்டும் அவலத்தையே அனுபவிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சமாதான விரோதிகளால் மேற்கொள்ளப்பட்டதொன்றாகும். இது தொடருமேயானால் பொது மக்களாகிய நாம் எமது பாதுகாப்பிற்காக மீண்டும் இதுவரை காலமும் எம்மைப் பாதுகாத்த அதேவழியினையே பின்பற்றுமாறு புலிகளை நிர்ப்பந்திக்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவோம். இது தவிர்க்கமுடியாத தொன்றாகவே அமையும்.

★ ★ ★

### கிராமிய உழைப்பாளர் சங்கம்

மானிப்பாயில் இடம்பெற்ற சம்பவமானது மிகவும் வருந்தத்தக்க செயலாகவும் சமாதான முயற்சியைக குழப்பும் செயலாகவும் அமைந்துள்ளது. நிராயுதபாணிகளான பெண் போராளிகளை ஸ்ரீலங்கா இராணுவம் கண்மூடித்தனமான தாக்குதலை அவர்கள்மேல் கட்டவிழ்த்துவிட்டதுடன் பொதுமக்களையும் கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளார்கள்.

சமாதான முன்னெடுப்புக்களில் தமிழ்மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் ஈடுபாடு காட்டிவரும் இத்தருணத்தில், சமாதானத்தில் மக்களுக்கு அவநம்பிக்கைகளை ஏற்படுத்தும் செயலாக இது அமைந்துள்ளது.

யுத்தம் ஒன்றைத் திணிப்பதன் மூலம் தமிழ் மக்களை இன அழிப்புக்குட்படுத்த நினைப்பதையே இச்சம்பவம் எமக்குத் தெட்டத்தெளிவாக உணர்த்தி நிற்கின்றது. சமாதான முயற்சிகளுக்கு கேடுவிளைவிக்கும் இதுபோன்ற சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இனிமேலும் இதுபோன்ற நாகரிகமற்ற செயல்களைத் தவிர்த்து மக்களுக்கு உண்மையான சமாதானத்தைக் கொண்டுவர வழி வகுக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

★ ★ ★

### தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் மன்றம்

கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் இலங்கையில் குறிப்பாக யாழ்குடாநாட்டின் உள்ளேயும் வெளியேயும் இலங்கை அரசின் கடற்படை, தரைப்படை என்பன திட்டமிட்டு தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீது மட்டுமன்றி, தமிழர்கள் மீதும் தமது அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டு வேடிக்கை பார்க்கின்றது.

குறிப்பாக மானிப்பாயில் எட்டுப் பெண் போராளிகள் மிகமோசமாகத் தாக்கப்பட்டமையும் போராளிகள் தாக்கப்படுவதனை கேள்வியுற்றுத் திரண்ட பொதுமக்கள் மீது இராணுவத்தின் விசேட படைப்பிரிவினர், கண்காணிப்புக்குழு அதிகாரி முன்னிலையில் குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொண்டமையும் அப்பட்டமான மனித உரிமை மீறல் சம்பவமும் போர்நிறுத்த உடன்படிக்கை மீறலும் ஆகும்.

இதேவேளை, கடந்த சிலநாள்களிற்கு முன்னதாக நெடுந்தீவுக் கடற்பரப்பில் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் கடற்படையினர் விடுதலைப்புலிகளின் படகை தமது முகாம் நோக்கி இழுத்துச்செல்ல முற்பட்டமையும் தன்மானம் காக்கும் போராளிகள் தம்மைத் தாமே மாய்த்துக்கொண்ட நிகழ்வும் ஒரு துன்பியல் நிகழ்வும் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு மாறான செயலுமாகும்.

யாழ்.குடாநாட்டில் போர்நிறுத்த உடன்படிக்கையை குழப்ப இராணுவ சக்தி திட்டமிட்டுள்ளதோ என எண்ணத் தோன்றுகின்றது; பொறுமையைச் சோதிக்கின்றது; சீண்டிப் பார்க்கின்றது. இவ்வாறான மிலேச்சத்தனமான இராணுவ அராஜகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இல்லையேல் கொதித்தெழும் மக்கள் சக்தியின் முன்னால் யாழ்குடாநாட்டு இராணுவத் தரப்பு விரும்பத்தகாத அசௌகரியங்களை சந்திக்கவேண்டிவரும் என எச்சரிக்கை விடுக்கின்றோம். யுத்ததை திணிக்க முயல்வோர் யுத்தத்தால் அழிவைப் பெறுவர். இது உலக நீதி.

"மாணவர் சக்தி மாபெரும் சக்தி" சமாதானத்தைக் குழப்ப முற்படும் அனைவரையும் நாம் வன்மையாக கண்டிக்கிறோம். மானிப்பாயில் ஊடகவியலாளர் தாக்கப்பட்டதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

★ ★ ★

### வவுனியா வளாக மாணவர் ஒன்றியம்

இலங்கை அரசிற்கும் புலிகளிற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முன் வைக்கப்பட்ட நிபந்தனைகளை மீறும் வகையில் சிறிலங்கா இராணுவமும் கடற்படையும், தமிழ் மக்கள் மீதும் நிராயுதபாணிகளான விடுதலைப் புலிகள் மீதும் தமது அடாவடித்தனங்களையும் அட்டூழியங்களையும் கட்டவிழ்த்துவிட்டுள்ளார்கள். இது சமாதானத்தை விரும்பும் எந்தவொரு மனிதனாலும் ஏற்கமுடியாத செயல். பேரினவாத சக்திகளும் தேசவிரோதிகளும் இணைந்து ஜனநாயகத்திற்கு விரோதமாகச் செயற்பட்டுவருதல் மிகவும் கண்டிக்கத்தக்கதொரு விடயமாகும்.

அஹிம்சையின் வழியில் பரிணமித்த தமிழனின் அறப்போர் ஆயுதப் போராட்டமாக உருப்பெற்று, இன்று சிங்கள அரசிற்கே மாபெரும் சவாலாக மாறியுள்ளது. இதற்குக் காரணம் முன்னைய காலங்களில் தமிழ் மக்களிற்கும் அவர்களின் சொத்துக்கள், கல்வி, கலை, கலாசாரத்திற்கும் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளே. இதனை முன்பு சமாதானத்தை ஏற்படுத்த முயன்ற இலங்கை ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் குறிப்பிட்டுக் காட்டியிருந்தார். 1983 ஜூலைக் கலவரமே புலிகளிற்கு முதுகெலும்பாக அமைந்தது என்பதையும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அண்மையில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினர் அத்துமீறிய அழுத்தங்களைப் பிரயோகித்துள்ளனர். அதனால், 3 போராளிகளை இழந்த நிலையிலும் தமது உறுதி தளராது அமைதியாக நடந்துகொண்டிருக்கும் புலிகளை மீண்டும் மானிப்பாயில் சீண்டிப் பார்த்த செயல் மிகவும் கீழ்த்தரமானது. பெண்போராளிகள் இடுப்பில் அணிந்திருந்த பட்டியைக் கண்டு பயந்த படையினர் நிராயுதபாணிகளான அவர்களிடம் தமது வீரத்தைக் காட்டியுள்ளனர். ஆனால், அப்போராளிகள் அங்கிருந்த படையினரின் ஆயுதத்தைப் பறித்தே அவர்களை அழித்திருக்க முடியும். ஆயினும், அமைதி வழியைக் கடைப்பிடித்துள்ளனர். இது அவர்கள் சமாதானம் மீது கொண்ட இதய சுத்தியுடனான அக்கறையையே வெளிப்படுத்துகிறது.

ஸ்ரீலங்காப் படையினரின் இவ்வாறான மிலேச்சத்தனமான செயல்களை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் எமது விசனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

★ ★ ★

### ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி

மானிப்பாயில் இருக்கும் இராணுவம், விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளையும் பொதுமக்களையும் தாக்கியதானது மிகவும் கண்டிக்கத்தக்கதும் அநாகரிகமானதுமாகும்.

புலிகளுக்கும் அரசுக்குமிடையில் யுத்தநிறுத்தம் ஏற்பட்டு, ஒருவருட பூர்த்தியை கொண்டாட அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துவரும் தருணத்தில் இடுப்புப் பட்டி கட்டியதற்காக புலிப் போராளிகளைத் தாக்கி மீண்டும் ஒரு யுத்த சூழலுக்கு இராணுவம் முனைப்புக்காட்டுவது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது.

புலிகளுக்கும் முப்படைகளுக்கும் இடையில் ஏற்படக்கூடிய முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் யுத்தநிறுத்த மீறல்களைக் கண்காணிப்பதற்கும் தான் இலங்கையில் சர்வதேச கண்காணிப்புக் குழு பணியாற்றி வருகின்றது. எனவே விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர்கள் இடுப்புப்பட்டியுடன் நடமாடுவது அவர்களது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் முரணானதெனில் இராணுவத்தினர் அதனைக் கண்காணிப்புக்குழுவினருக்கு தெரியப்படுத்தி இருக்கவேண்டும். அதனைவிடுத்து, பெண் போராளிகளை மிருகத்தனமாகத் தாக்குவதும் அவர்களது இடுப்புப்பட்டிகளை அறுத்தெறிவதும் மிகமோசமான யுத்தநிறுத்த மீறல். இது சிங்கள இனத்துவேசத்தின் இன்னொரு வடிவம் என்பதையும் எம்மால் அவதானிக்க முடிகிறது.

இச்சம்பவத்தின்போது பொதுமக்களும் ஊடகவியலாளர்களும் கூட தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது புகைப்படக்கருவி போன்ற விலையுயர்ந்த பொருள்களும் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் மானிப்பாயில் இருந்த இராணுவம், காட்டுமிராண்டித்தனத்தின் உச்சத்துக்கே போயுள்ளது.

இப்படியான நிகழ்வுகள், அசம்பாவிதங்கள் தொடருமாயின் நிச்சயமாக சமாதானப் பேச்சுக்களில் இது பாரிய தாக்கத்தையும் பின்னடைவையும் ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும்.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு கடந்த ஒருவருடமாக புலிகளின் பெண் போராளிகள் இடுப்புப்பட்டியுடன் நடமாடுவதைப் பார்த்துக்கொண்டிருந்த இராணுவம் அன்று மட்டும் ஏன் இதனை ஒரு பாரிய பிரச்சினையாக்கி அவர்களை தாக்கியுள்ளதென்று கேள்வி வருகிறது. இதற்கு வேறொரு பின்னணி உள்ளதாகவே ஊகிக்கவேண்டியுள்ளது. பேச்சுக்களை சீர்குலைக்க பல்வேறுபட்ட சக்திகள் முயற்சித்து வரும் இவ்வேளையில், இராணுவத்தினது பலம்வாய்ந்த வேறு தரப்புக்களால் பகடைக்காய்களாக மாற்றப்பட்டார்களா என்பதை அரசாங்கம் ஆராயவேண்டும்.

எனவே, நடந்து முடிந்த மானிப்பாய் சம்பவம் தொடர்பாக முழுமையாக ஆராய்ந்து இதன்நோக்கம், இதன் சூத்திரதாரிகள் யாரென்பதை அரசாங்கம் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். இது மாதிரியான சம்பவங்கள் தொடராமலிருப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

★ ★ ★

### கஜேந்திரகுமார் எம்.பி.

யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு மாறாக கடந்த 12ஆம் திகதி விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் தாக்குதல் நடத்தியதன் மூலம் இராணுவத்தினர் யாழ்குடாநாட்டில் நிலவும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல்
### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எமது கல்லூரியில் கல்வி கற்கும் க.பொ.த. (உ/த) 2003 பிரிவு மாணவர்களுக்கு 17.02.2003 திங்கட்கிழமை தொடக்கம் தினமும் பி.ப. 3.00 - 4.00 மணிவரை கடந்த கால வினாத்தாள் கலந்துரையாடல் நடைபெறும். மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளவும். முதல் நாள் பௌதிகவியல், கணக்கீடு ஆகிய பாடங்கள் நடைபெறும்.

(சி-26539) - அதிபர்.



## ஏக விநியோகஸ்தர்கள்

இலங்கையின் உஷா ரெலிசொனிக் தயாரிப்புகளின் இறக்குமதியாளர்களும் ஏகவிநியோகஸ்தர்களும் ஆகிய

**ESTEE & SONS**

ஸ்தாபனத்தினரால்

உஷா ரெலிசொனிக் தையல் இயந்திரம், மின் விசிறி ஆகியவற்றின் வடபகுதி ஏகவிநியோகஸ்தர்களாக

**திருச்செந்தூரான் ரேடிங் கம்பனி**

315, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

எனும் ஸ்தாபனத்தாராகிய

நாம் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை வர்த்தகர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

(14516)



## ஸ்கிறீன் பிரின்டிங் செய்முறை பயிற்சி வகுப்புகள்



தென் தமிழகத்திலிருந்து அச்சுக்கலை நிபுணர் R.பரதன், D.P.Tech., வருகை தந்துள்ளார். பிரிவு II இற்கான வகுப்புகள் 18.02.2003 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக உள்ளதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

Career Com. Institute
79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

0777706334 - இணைப்பாளர்.

"Art Does Not Make The Man, The Man Makes Art"

(14502)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1943 - 01 - 23



விண்ணில் 2003 - 01 - 16

### அமரர் பூபதி பொன்னு

கண்ணின் மணிபோல் கனிவுடன் வளர்த்து
கண்கலங்க எம்மை தவிக்க விட்டு இறையடி
சென்று 31 நாள்கள் ஓடி மறைந்திடினும்
எம் ஈரவிழிகள் இன்னும் காயவில்லை அம்மா!

ந.பொன்னு,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (14518) - குடும்பத்தினர்.

## 90ஆம் நாள் நீங்காத நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்

உறவுகள் மகிழ 10 - 12 - 1984



உறவுகள் தவிக்க 17 - 11 - 2002

### முருகர் கோகுலன்

(யா/வரணி மகா வித்தியாலய உயர்தர மாணவன்)

எமதன்புக் கோகுலே!
அணையாத தீப சோதியே!
குறும்பான உன் பேச்சும், குடித்தனமான செயலும்
பிஞ்சு உள்ளத்திலே பரமன் கதி அடைந்தாயே!
காலன் உனை ஏன் கவர்ந்தான்?
கதறி அழுது கரைகாண முடியாது கலங்கி நிற்கின்றோம்
எம் கண்ணே! உன்னை எப்போது காண்போம்!
காலம் எல்லாம் உன் நினைவுடன் வாழ்வோம்.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் பிரிவால் துயருறும்:

முருகர் குடும்பம்,
இடைக்குறிச்சி, வரணி.

அன்பு அப்பா, அம்மா,
சகோதரன், சகோதரி.

(14466)

## தமிழீழ வைப்பக தேர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.15

இன்று நடைபெற விருந்த தமிழீழ வைப்பகத்தின் உத்தியோகத்தவியாளர் தரம் III இற்கான போட்டித்தேர்வு பிற்போடப்பட்டுள்ளதாக தமிழீழ வைபக மேலாண்மைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட தமிழர் தேசிய எழுச்சிப்பேரவையினர் மானிப்பாய் சம்பவத்தைக் கண்டித்து இன்று நடத்தவுள்ள கண்டனப் பேரணிக்கு ஆதரவளிக்கும் முகமாகவே தேர்வு பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## தொழில்நிபுணத்துவ பயிற்சி நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.15

மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் கபீர் ஹாஷீமின் ஏற்பாட்டில், ஸ்ரீலங்கா தொழிற் பயிற்சி அதிகாரசபையின் தொழில் வழங்கும் பிரிவு ஒழுங்கு செய்துள்ள தொழில் நிபுணத்துவப் பயிற்சி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆட்சேர்ப்பு நிகழ்ச்சி இன்றும், நாளையும் காலை 9 மணிமுதல் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ)

## கோண்டாவிலில் மீண்டும் பாதீனியம்

வலி.வடக்கு,பெப்.15

கோண்டாவில் கிழக்கில் மீண்டும் பாதீனியச் செடி வளர ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச செயலக விவசாயக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(எ-86)

## கசிப்பு வழக்கில் பதினொரு பேரிடம் ரூ. 2 லட்சம் அறவீடு

மல்லாகம் மாவட்ட நீதிமன்றினால் கடந்த செவ்வாய்கிழமை மட்டும் கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்ட பதினொரு பேருக்கு இரண்டு லட்சத்து 43 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் மானிப்பாய், இளவாலைப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கே இத்தொகை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

3ஆம் கட்டை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நாகராசா வசந்தகுமார் என்பவருக்கு 10 போத்தல் கசிப்பு மற்றும் 270 போத்தல் கோடாவும் வைத்திருந்தமைக்காக ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மானிப்பாய் பொலிஸார் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

நிற்சாமம், சங்கானையைச் சேர்ந்த கனகு சிவசுப்பிர மணியம் என்பவர் 90 போத்தல் கசிப்பு வைத்திருந்தமைக்காக 42 ஆயிரம் ரூபாவும் -

சகாயபுரம் மாதகலைச் சேர்ந்த மாணிக்கன் சந்திரகுமார் என்பவர் 150 போத்தல் கோடா மற்றும் உபகரணங்கள் வைத்திருந்தமைக்காக 30 ஆயிரம் ரூபாவும் -

நிற்சாமம் சங்கானையைச் சேர்ந்த இராசதுரை இராசரூபதி என்பவருக்கு 80 போத்தல் கசிப்பு வைத்திருந்தமைக்காக 40 ஆயிரம் ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டது. (எ-86)

## சமாதான...

(IIIஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்பட்டுள்ளனர்.

மக்களின் மீள் குடியமர்வைத் தடைசெய்து, உயர் பாதுகாப்பு வலயங்களைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்வதற்காக இராணுவம் இப்படியான கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுகிறது. சில வாரங்களுக்கு முன்னர் நெடுந்தீவுக் கடலில் இடம்பெற்ற சம்பவமும் அத்தகையதே.

இப்படியான சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்றால் அதற்கான முழுப்பொறுப்பையும் இராணுவமே ஏற்கவேண்டிவரும். எனவே, இராணுவம் இது விடயத்தில் நிதானமாகச் செயற்படவேண்டும். இலங்கைத் தீவில் ஏற்படப்போகும் நிரந்தர சமாதானத்துக்கு இராணுவமும் தனது பங்களிப்பை வழங்கவேண்டும்.


### காணிதேவை

நல்லூர், இராச பாதையில் வெற்றுக் காணி 2 பரப்பு அல்லது 3 பரப்புக் காணி குடியிருப்புக்கு விலைக்குத் தேவை.

தொடர்பு:
க.இலட்சுமணன்,
டச்சு றோட்,
சித்தன்கேணி.

(14514)



## TENDER NOTICE

**MINISTRY OF HOUSING AND PLANTATION INFRASTRUCTURE**
**DEPARTMENT OF BUILDINGS**

1) The Chairman Divisional Tender Board, Department of Buildings, Jaffna. will receive sealed tenders for Fabricating, Hoisting and Fixing of mild steel roof trusses at *External Exam Unit, University of Jaffna* up to 10.00 a.m. on 25-02-2003

2) Tender forms are available for *collection with Chief Engineer (Jaffna), Department of Buildings, Beach Road, Jaffna* up to 3.30 p.m. on 19.02.2003

3) Tenders will be opened immediately after the closing at the *Chief Engineer's Office, Department of Buildings, Beach Road, Jaffna*. Tendeers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

4) Tender forms will be issued only to those who hold possess prior experience in the above field for the last five years. Documentary evidence shall be annexed.

5) Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to the *Chairman, Divisional Tender Board, Department of Buildings, Beach Road, Jaffna.*

Chief Engineer,
Department of Buildings,
Beach Road, Jaffna.

(C/26540)


## கண்ணீர் அஞ்சலி

எம்மோடு கல்வி பயிலும் சக மாணவியான
செல்வி ராதிகாவின் அருமைத் தாயார்

### திருமதி இராசாத்தி கார்த்திகேசு

அவர்கள் 14.02.2003 அன்று காலமாகியதையிட்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(14510) சக மாணவிகளும், பெற்றோரும்.

## 9ஆம் ஆண்டு நிறைவு அஞ்சலி

தோற்றம் 26 - 10 - 1950



மறைவு 24 - 02 - 1994

### திருமதி தியாகராசா வசந்தமலர்

எம்மைப் பத்து மாதம் சுமந்து பக்குவமாகப்
பெற்றெடுத்த அன்னையே!
எம்மை விட்டுப் பிரிந்து ஒன்பது
ஆண்டுகள் சென்றாலும் - நாம்
உன்னை பெற்ற விடுவோமா தெய்வமே?

446, இராமலிங்கம் வீதி,
முடமாவடி, நல்லூர். (14511)

தாய், சகோதரர்கள்,
கணவர், பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### அண்ணாமலை நாகராஜன் (ராஜன்)

பிரபல மோட்டார் சைக்கிள் மெக்கானிக் காலஞ்சென்ற அப்பாமணி அவர்களின் பேரனான மெக்கானிக் அண்ணாமலை நாகராஜன்(ராஜன்) அவர்கள் 12.02.2003 புதன்கிழமை குருமணகாடு வவுனியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.02.2003) சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சு.மகாலிங்கம்
சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பெரியப்பா குடும்பம்.

(14506)

### திருமதி தம்பையா பரிபூரணம் (பார்வதி)

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பையா பரிபூரணம் அவர்கள் நேற்று (14.02.2003) வெள்ளிக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் தம்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பார்வதி தம்பதிகளின் மருமகளும் விநாயகமூர்த்தி (பிரான்ஸ்), திலகராணி (மதி), இராஜேஸ்வரி, கேதீஸ்வரன் (பிரான்ஸ்), பஞ்சாட்சரம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுகி (பிரான்ஸ்), குணரட்ணம் (மலேரியா தடுப்பு பகுதி, யாழ்.), தியாகமூர்த்தி (லண்டன்), மாலா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, யோகம்மா, பொன்னு மற்றும் நாகேசு, கண்மணி, குருமூர்த்தி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (14512)

தகவல்:
அ.குணரட்ணம்
(மருமகன்).